15-1-54

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இருமுறை

11

411
2.54

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 MAY 1954



# கேட்டீர்களா!

## புதிய கல்வித் திட்டம்

புதிய கல்வித் திட்டம் அமுலுக்கு வந்த பிறகு இந்த ராஜ்யத்தில் பள்ளிக்கூடங்களில் படிக்க வரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. இந்த உண்மையைக் கல்வி மந்திரி சட்ட சபையில் வெளியிட்டார். மதுரை ஜில்லாவில் மட்டும் 40 சதவிகிதம் அதிகரித்திருக்கிறதாம்.

## லண்டனில் சந்திரலேகா

ஜெமினி படம் சந்திரலேகாவை லண்டனில் திரையிட்டார்களாம். காட்சிக்கு ஏற்பாடு செய்த கமிட்டி அதற்கு வசூலான ரூ. 1400/-ஐ இந்தியப் பிரதம மந்திரியின் நிவாரண நிதிக்கு வழங்கிவிட்டார்களாம்.

## குழந்தைகள் வாரம்

சென்னை, தேனும்பேட்டையில் நடைபெறும் காங்கிரஸ் கண்காட்சியில் டிசம்பர் கடைசி வாரத்தைக் குழந்தைகள் வாரமாகக் கொண்டாடினார்கள். அப்போது திறந்த வெளி சினிமாத் தியேட்டர் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

## மலேயாவில் குரங்கு மனிதர்கள்

மலேயாவில் காடுகளின் ஓரமாக குரங்குபோன்ற மனிதர்கள் (பாதி குரங்காகவும் பாதி மனிதனாகவும் உள்ளவர்கள்) சிலர் அடிக்கடி காணப்படுகிறார்களாம். இவர்களைக் கண்டு மக்கள் பீதியடைந்துள்ளதால் இவர்களைப் பிடிக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

## டென்னிஸ் சாம்பியன் கிருஷ்ணன்

சென்னையைச் சேர்ந்த பதினேழு வயதான கிருஷ்ணனுக்கு நாஷனல் டென்னிஸ் சாம்பியன் என்ற பட்டம் சூட்டப்பட்டது. சென்னை திரும்பிய கிருஷ்ணனுக்குச் சமீபத்தில் ஒரு வரவேற்பும் நடைபெற்றது.

## குழந்தைகளின் ஓவியக் கண்காட்சி

ஐந்தாவது உலகக் குழந்தைகளின் ஓவியக் கண்காட்சி சென்ற வாரம் டில்லியில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியை ஜனாதிபதி ராஜேன் பாபு திறந்துவைத்தார். இதை வழக்கம்போல் ஏற்பாடு செய்து நடத்தியவர் 'சங்கர்ஸ் விக்லி' என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ சங்கர். வர்ணச் சித்திரங்கள், ஓவியங்கள், கட்டுரைகள் எழுதிய 44 நாடுகளைச் சேர்ந்த 2000 குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. மொத்தம் 17,000 குழந்தைகள் இந்தப் போட்டியில் கலந்து கொண்டார்கள்.

## விமரிசனம்

பூகம்பம் என்ற அருமையான கதை ஒன்றை ஜில்ஜில் பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கிறார்கள் எழுத்தாளர் சம்பந்தம் இதை எழுதியிருக்கிறார். பாலேவனத்தில் நடப்பதாகக் கற்பனை செய்யப்பட்ட இந்தக் கதை சுவாரஸ்யமாக இருக்கிறது. விலை அணா 8.

கண்ணன்



## பொருளடக்கம்

மலர்: 5 இதழ்: 2

**15 - 1 - 1954**


| | பக்கம் | |
|---|---|---|
| குழந்தைகளே ! | .. | 2 |
| சந்திரகிரிக் கோட்டை | .. | 3 |
| கம்பனி கலைந்தது | .. | 9 |
| பலாப்பழ வழக்கு | .. | 13 |
| எல்லாம் நன்மைக்கே | .. | 18 |
| காளி - மனைவி | .. | 24 |
| ராமேசுவரம் போனாலும் | .. | 29 |
| மாஸ்டர் பாலகுமார் | .. | 33 |
| அசட்டுப் பிச்சு | .. | 35 |
| கல்கத்தா டெஸ்ட் | .. | 40 |
| கேட்டீர்களா! - இரண்டாவது அட்டை | | |



வருஷ சந்தா ரூ. 3/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா ரூ. 12/-


கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## கனவும் மான்குட்டியும்

திம்மன் என்ற வேடன் ஒரு நாள் காட்டிற்குச் சென்று ஒரு மான்குட்டியை அம்பினால் கொன்று வீழ்த்தினான். பிறர் கண்ணில் படாதவாறு அதை மறைத்து வைத்துவிட்டு மீண்டும் வேட்டையாடச் சென்றான். ஆனால் மாலை அவன் வீடு திரும்பும்பொழுது காலையில் மான் குட்டியை மறைத்து வைத்த இடம் மறந்து போய்விட்டது. என்ன யோசித்தும் அந்த இடம் ஞாபகத்துக்கே வரவில்லை. கடைசியில், 'காலையில் மான் குட்டியைக் கொன்றது எல்லாம் சொப்பனத்தில் தான் நிகழ்ந்தது. உண்மையில் இல்லை' என்று வழி எல்லாம் பிதற்றிக் கொண்டே சென்றான்.

இந்தப் பிதற்றலைக் கேட்ட ஒரு மனிதன் நேராகக் காட்டுக்குப் போய் மிகவும் கஷ்டப்பட்டு அந்த மானைத் தேடி வீட்டுக்குக் கொண்டு வந்தான். தன் மனைவியிடம், "ஒரு வேடன் இந்த மான் குட்டியை வைத்த இடம் மறந்து, 'சொப்பனத்தில் கண்டேன்' என்றான். அதுகேட்டு நான் போய்க் கொண்டுவந்து விட்டேன். ஆகையால் இது கனவல்ல; உண்மை தான்" என்று கூறினான்.

அவன் மனைவி சிரித்தபடி, "நீங்களே இதைக் கொன்று, கொண்டு வந்திருக்கிறீர்கள். சொப்பனம் கண்டது நீங்கள்தான்; அவனல்ல" என்று கூறினாள்.

"யார் கனவு கண்டால் என்ன? மான்குட்டி நமக்குக் கிடைத்து விட்டது" என்று சொல்லி மகிழ்ந்தான் கணவன்.

# குழந்தைகளே!

பொங்கல் வாழ்த்துக்கள். பொங்கல் புது நாளன்று இந்தக் கண்ணன் இதழை அன்புடன் உங்களுக்கு வழங்குவது இதுதான் முதல் தடவை. ஆங்கில மாதம் முதல் தேதிக்கு முதல் தேதி முன்பெல்லாம் கண்ணன் வெளி வந்துகொண் டிருந்தது. கண்ணன் மாதம் இருமுறையான பின்னர் இந்த வருஷம்தான் உங்களுக்குப் பொங்கல் நாளன்றே மங்கள வாழ்த்துக் கூறும் வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. ஆகா, இது எத்தனை மகிழ்ச்சியாக இருக்கிறது!

முன் இதழில் குறிப்பிட்டதுபோல இதில் சந்திரகிரிக் கோட்டை என்ற புதிய சரித்திரத் தொடர்கதை ஆரம்பமாகிறது. கதை மிகவும் உன்னதமான கதை. ஆரம்பமே வெகு சுவாரஸ்யமாக இருக்கிறது. போகப் போக விறுவிறுப்பும் வேகமும் கொண்டிருக்கிறது கதை. திறமை, பலம், புத்தி சாதுரியம் இவையனைத்தும் கொண்ட போட்டிகளில் ஈடுபடும் இரட்டைச் சகோதரர்களில் யார் வெல்லப்போகிறானோ என்ற திகைப்பு நமக்கு ஏற்படாமல் போகாது. நீங்கள் ஒவ்வொருவருமே அவர்களுக்காக நடத்தும் போட்டிகளில் கலந்துகொள்வது போன்ற உணர்ச்சி கொள்வீர்கள் என நம்புகிறேன். கண்ணனில் வந்த கதைகளுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல இது இருக்கும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. படித்துப் பாருங்கள். நான் சொல்வது சரியாக இருக்கிறது என்பதை நீங்களே சொல்வீர்கள்.

புது வருஷத்தில் கண்ணன் கழக அங்கத்தினர்களை மீண்டும் சேர்ப்பதைத் தொடங்க எண்ணுகிறோம். இதுவரையில் சேர்ந்தவர்களைப் பதிவு செய்துகொள்வதற்காகவே நடுவில் சில மாதங்கள் நிறுத்தி வைத்திருந்தோம். இப்போது 14,000 அங்கத்தினர்களுக்கு மேல் கண்ணன் கழகத்தில் இருக்கிறார்கள். பாக்கியுள்ளவர்களுடைய பெயர்கள் அடுத்த இதழிலிருந்து வெளியாகும். புதிதாகச் சேருபவர்களும் சேரலாம்.

வெளியூரில் கண்ணன் கிளைக் கழகங்கள் பல ஏற்பட்டு, அவை சிறந்த முறையில் வேலை செய்தும் வருகின்றன. புதிதாக ஏற்படுத்தியுள்ள கிளைக் கழகங்களைப்பற்றி எழுதும்படி அந்தந்த உபதலைவர், காரியதரிசிகளைக் கேட்டுக்கொள்கிறோம்.

பத்திரிகையிலுள்ள புது அம்சங்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தை எழுதியனுப்புங்கள்.

—ஆசிரியர்.



# சந்திரகிரிக் கோட்டை

**'ஜனு'**

## முன்னுரை

நிலமகளும் கலைமகளும் இந்த நாட்டில் கொஞ்சிக் குலவினுர்கள். தனலக்ஷ்மியும் தைரியலக்ஷ்மியும் கைகோத்து உலாவினுர்கள். கலைஞரும் கவிஞரும் நாட்டில் நிறைந்திருந்தார்கள். முத்தும் ரத்தினமும் தெருவில் குவித்து வாணிபம் செய்தார்கள். வாள் வலியும் தோள்வலியும் கொண்டிருந்தார்கள் இளங்காளைகள். அப்படிப்பட்ட ஒரு காலத்தில் நடந்த இந்த அற்புதமான கதை எந்தச் சரித்திர ஏடுகளிலும் இடம் பெறவில்லை. எல்லாத் தேசங்களிலுமே பல அரிய சம்பவங்களைப் பற்றிய குறிப்புக்கள் கிடைக்காமல் போய்விடுவது உண்டு. இன்ன காலத்தில், இன்ன இடத்தில் நடைபெற்றவை என்ற விவரங்களே இல்லாமல் பல கதைகள் நாட்டில் வழங்குவதும் உண்டு. அவ்விதம் வழங்கி வரும் கதைகளை நாம் இன்றும் நாட்டுப்புறங்களில் கேட்கலாம்.

தென்னுட்டில் உள்ள புராதனமான ஆலயங்களும் பாழடைந்த கோட்டை கொத்தளங்களும் நமக்கு எத்தனை எத்தனையோ அருமையான கதைகளைச் சொல்லக் காத்திருக்கின்றன. நாம்தான் கோபுரங்களிலுள்ள சிற்பங்களையும் கோட்டை கொத்தளங்களிலுள்ள சின்னங்களையும் அக்கறையுடன் கவனிப்பதில்லை. கவனித்துத் தெரிந்துகொள்வதும் இல்லை. ஆராய்ந்து பார்த்தால் நமது முன்னேர்கள் இப்படியெல்லாம் வாழ்ந்தார்களா, நமது நாடு இவ்வளவு பெருமையுடனும் சிறப்புடனும் விளங்கியதா என்று பிரமித்துப் போவோம்.

சந்திரகிரி என்ற ஊருக்கு இன்று ரெயிலும் இல்லை; பஸ்ஸும் இல்லை. ரெயிலிலும் பஸ்ஸிலும் போய் இறங்கி முக்கால் மைல் தூரம் நடந்தால் அந்த அழகிய சிறு கிராமத்துக்குப் போகலாம். அந்தக் கிராமத்தில் சோழ அரசன் கட்டிய ஒரு கோவில் கவனிப்பாரற்று, புதர்களும் செடிகளும் மண்டி, மூடிக் கிடக்கிறது. எதிரே ஒரு பெரிய மேடும் சுற்றிலும் தூர்ந்து போன சிற்ருறும் இருக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது அழகிய பெரிய நகரம் ஒன்று எத்தனையோ நூற்றுண்டுகளுக்கு முன்னே சீரழிந்து போனது போலத் தோன்றும்.

நானூறு ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னுள்ள நாட்களுக்கு வந்துவிட்டோமோ என்றே நமக்கும் பிரமை தட்டும்.

அப்படிப் பிரமித்து நிற்கும் போதே, "என்ன பார்க்கிறீங்க?" என்று ஒரு கிழக்குரல் பின்னுலிருந்து வரும். அவனைப் பார்த்தால்



நமக்கு இன்னும் தூக்கி வாரிப் போடும். இந்த நானூறு ஆண்டுகளாகவே இந்தத் தொண்டுக் கிழவன் உயிருடன் இருந்து வருகிறானே என்று மலைத்துப் போவோம்.

"கோட்டையைப் பார்க்கிறீங்களே - சும்மாப் பார்த்து என்ன உபயோகம்? அதன் கதையைக் கேட்க வேண்டாமா?" என்று நம்மை அந்தப் பாழடைந்த கோவிலுக்கு அழைத்துச் செல்வான். உட்காரச் சொல்லி, கதையையும் ஆரம்பிப்பான்.

தமிழ் நாட்டின் வட எல்லை வேங்கட மலையாக இருந்த காலத்தில் நடந்ததாக வழங்கி வரும் கதையைத்தான் அவன் சொல்லுவான். அந்தக் கதையை ஆதாரமாகக் கொண்டு, மேலே அழகாக மெருகு கொடுத்து, கற்பனையையும் கூட்டிச் சேர்த்து எழுந்ததுதான் இந்தச் சந்திரகிரிக் கோட்டை!

## 1

குதிரைகளின் குளம்பொலி பாட்டுக்குத் தாளம் போடுவது போல 'டக் டக்' என்று ஒரே சீராக ஒலித்தது. கையில் ஈட்டியுடனும் மார்பில் கவசத்துடனும் கம்பீரமாகக் குதிரைகளின்மீது ஏறி வந்த இரண்டு வீரர்களையும் கோட்டை வாயிலில் உள்ள காவலாளிகள் கூர்ந்து பார்த்தார்கள். அந்த வீரர்கள் வேறு யாருமல்ல; சந்திரகிரி வீரர்கள்தான் கையில் வெற்றிக்கொடியுடன் வருகிறார்கள் என்பது தெரிந்தது.

அடுத்த கணம் வெற்றி முரசு



எழுந்தது. தடதடவென்று நகரா முழங்கியது. வெற்றிச் சங்கும் கொம்பும், 'பூம் பூம்' என்று ஆர்த்தன. மாடமாளிகைகள், கூட கோபுரங்கள் அனைத்திலும் கண நேரத்தில் வெற்றிக் கொடிகள் பறக்கவிடப் பட்டன.

மேல் திசையில் சூரியன் மெதுவாக மறைந்து வந்தான். ஆனால் அதற்குள் நகர் எங்கும் தீபாலங்காரங்கள் செய்யப்பட்டன. வீடு தோறும் மங்கள வாத்தியங்களும் மந்திர கோஷங்களும் ஒலித்தன.

“ராஜாதி ராஜ, ராஜ கம்பீர, ராஜ ஒய்யார, ராஜ மார்த்தாண்ட மகேந்திர குலதிலக, மகாராஜாதி ராஜ சந்திரவர்ம ராஜா வெற்றி வாகை சூடி, கங்க ராஜனைப் புறமுதுகிட்டு ஓடும்படி வென்று, நகர் திரும்பப் போகிறார்!” என்று நகராப்படையினர் நகர வீதிகளில் கட்டியங் கூறிக்கொண்டு சென்றார்கள்.

நகரத்துப் பெண்கள் மங்கள ஆரத்தி கரைத்து வைத்தனர். அந்தணர்கள் வேத கோஷத்துடன் எதிர்கொண்டழைக்க முன் வந்தார்கள். சிறுவர்கள் பட்டணப் பிரவேசம் செய்ய இருக்கும் ராஜ பவனியைப் பார்த்துக் குதூகலிக்கத் தயாராக நின்றார்கள்.

'டட டட, ஜணஜண, டமடம' என்று முதலில் ஆர்ப்பாட்டத்துடன் போர்க்களத்திலிருந்து படைகளின் ஊர்வலம் புறப்படத் தொடங்கியது.

கோட்டையின் மேல் நின்று பார்த்தால் அரைக் காத தூரத்தில் உள்ள போர்க்களம் புகைமண்டலம் போல் தெரிந்தது. கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட்டு, படையினரை வரவேற்க நகர மக்கள் தயாராக நின்றார்கள்.

நேரம் போய்க்கொண்டேயிருந்தது. நடுச் சாமம் ஆகியும் படைகள் போர்க்களத்திலிருந்து புறப்பட்டதாகத் தெரியவில்லை. எவ்வளவு மெல்ல வந்தாலும் இத்தனை நாழிகைக்குள் கோட்டை வாயிலுக்கு வந்திருக்கலாமே என்ற கவலை எல்லாருக்கும் அதிகரித்தது.

அரண்மனையின் உப்பரிகையில் தந்தையை எதிர்பார்த்துக்கொண்டிருந்த இளவரசி இந்துமதிக்கு நேரம் செல்லச் செல்ல இருப்பே கொள்ளவில்லை. அவள் அரசனுக்கு ஒரே பெண்; தாயில்லாப் பெண். அவளை மணம் செய்து கொடுக்க மறுத்ததாலேயே இந்தக் கங்கப்போர் வந்தது. கங்க அரசனுக்கு நாற்பது வயதுக்குமேல் இருக்கும். அப்படியிருந்தும் அவனுக்குக் கல்யாண ஆசை போகவில்லை. இந்துமதி பார்க்க வெகு லக்ஷணமாக இருப்பாள். கல்வி கேள்விகளிலும் அறிவு ஆற்றலிலும் அவள் நிகரற்று விளங்கினாள். இதைக் கண்ட கங்க அரசனுக்கு ஆசை தட்டியது. மண ஓலை கொடுத்தனுப்பினான். சந்திரவர்ம ராஜனுக்கு வந்த எரிச்சலுக்குக் கணக்கு வழக்கு இல்லை.

ஓலையைவாங்கிக் கிழித்தெறிந்து, "இதுதான் என் பதில் என்று போய்ச்சொல்!" என்று தூதுவனை அனுப்பினான். ஆசையினால் நிதானம் இழந்த கங்க அரசன் படைகளைத் திரட்டிக்கொண்டு சந்திரகிரியின்மீது போர் தொடுத்தான். மூன்று நாள் உக்கிரமாகப் போர் நடந்தது. ஆனால் சந்திரவர்மனின் வீரத்தினாலும் சாமர்த்தியத்தினாலும் சந்திரகிரிப் படைகள் எதிரிகளைச் சூழ்ந்துகொண்டன. அரசனே போர்க்களம் சென்று படைகளுக்கு உத்தரவுகள் போட்டு வந்தான். வெற்றி நிச்சயம் என்பது இந்துமதிக்குத் தெரிந்தாலும் சண்டை என்றால் மனசு கேட்குமா? சரியான சாப்பாடு தூக்கம் இல்லாமல் தவித்தாள். அஸ்தமன சமயத்தில் வெற்றிச் செய்தியைக் கேட்ட பிறகுதான் அவளுக்கு நல்ல மூச்சு வந்தது. ஆனாலும் நடுச்சாமம் கழிந்து விட்டதே! ஏன் இன்னும் தந்தை திரும்பிவரவில்லை என்று அவளுக்குக் கவலை உண்டாயிற்று. உடனே ஆட்களை அனுப்பி விசாரித்து வரும்படியாகக் கட்டளையிட்டாள்.

இரண்டு வீரர்கள் போர்க்களம் நோக்கி விரைந்தார்கள்.

## 2

**பா**சறையில் ஒரே அமர்க்களமாக இருந்தது. சைன்னியங்கள் தங்கியிருந்த கூடாரங்களில் ஒரே பரபரப்பும் அமளி துமளியுமாக இருந்தன.

சந்திரவர்ம மகாராஜாவைக் காணவில்லை என்ற செய்தி கண நேரத்தில் பரவி ஒரு பெரிய பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அரசனுடைய அந்தரங்கப் பணியாட்கள் காளனும் கடம்பனும் கூக்குரலிட்டார்கள்.

மந்திரிப் பிரதானிகளும் சேனைத் தலைவர்களும் அங்குமிங்கும் தேடினார்கள். தீவட்டிகளைக் கொளுத்திக்கொண்டு குதிரைகளின்மீது ஏறி நாலு புறமும் சுற்றித் தேடினார்கள்.

எட்டின மட்டும் சேனா-தானைத் தலைவர்கள் அலைந்து திரிந்து சுற்றியும் ராஜனைக் காண முடியவில்லை. போர்க்களத்தில் ஒரே ரத்தக் களறியாக இருந்தது. குற்றுயிரும் குலை உயிருமாக விழுந்து கிடந்த வீரர்களின் மரண ஓலம் மகா பரிதாபகரமாக இருந்தது. நரிகளின் ஊளைக் குரல் பயங்கரமாகச் சுருதி கூட்டியது.

நகரை நோக்கிப் புறப்பட இருந்த படைகள் தேங்கி நின்றன. காயம்பட்ட போர் வீரர்களைக் கவனிப்பார் இல்லை.

பாசறைக்குப் பின்புறத்திலிருந்து கடம்பனுடைய கூக்குரல் கேட்டது. கையில் தீப்பந்தத்துடன் காளன் ஓடிச் சென்று பார்த்தான்.

"ம்ம்ம்.." என்ற முனகலுடன் அங்கே சந்திரவர்மன் குருதி வெள்ளத்தில் தோய்ந்து கிடந்தான். பாசறைக்குப் பின்புறமாய் மறைந்திருந்த எதிரியின் கையாள் ஒருவன் அரசனை வாள்கொண்டு தாக்கிவிட்டான். இதை ஊகிக்க அவர்களுக்கு வெகு நேரமாகவில்லை.

நொடிப்போதில் இந்தப் பயங்கரச் செய்தி படைகளிடையே பரவியது. அமைச்சர் அருளேந்தியும் சேனைத் தலைவன் செங்கோடனும் ஓடோடி வந்தார்கள். மெல்ல இரண்டு பேராகத் தூக்கி அரசனைப் பாசறையிலுள்ள மஞ்சத்தில் விட்டார்கள். ரத்தத்தைக் கழுவி உடனே செய்ய வேண்டிய மருத்துவ முறைகளைச் செய்தார்கள். இரண்டு தாதிகள் மெல்ல, காற்றோட்டத்துக்காகச் சாமரம் வீசினார்கள். ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை.

வெகு நேரம் கழித்து அரசன் மயக்கம் தெளிந்து, கண் விழித்துப் பார்த்தான். அருளேந்தியும் காளனும் முன்னால் வந்து பணிவாக நின்றனர். கடம்பன் மட்டும் அரசனுடைய குறிப்பையறிந்தவன்போல, "இளவரசியை அழைத்துவர ஆட்கள் போயிருக்கிறார்கள்!" என்றான்.



அரசன் ஒரு கணம் கண்களை மூடித் திறந்தான். பிறகு தீனமான குரலில், "வேண்டாம்.. என்னை அரண்மனைக்குக் கொண்டு போங்கள்!" என்றான். இந்த நாலு வார்த்தைகளைச் சொல்வதற்குள் தான் எத்தனை பிரயாசை!

படைகள் அணிவகுத்து நின்றன. வெற்றி விருதுகள் ஆர்ப்பாட்டமின்றி முன்னால் சென்றன. யானைப் படை, குதிரைப் படை, காலாட் படை எல்லாம் அமைதியாக ஊர்ந்தன. சர்வ ஜாக்கிரதையாக அரசனைப்



**கிட்டு: (சோனியைப் பார்த்து) என்னடா இது, உன் உடம்பிலே எங்கே தொட்டாலும் கரடு முரடா இருக்கே! கொஞ்சங்கூடச் சதைப் பற்றையே காணோமே?**

**ராமன்: எனக்கு எந்த விஷயத்திலேயும் பற்றே கிடையாதுடா, அதுதான்!**

**—வாசன், பெருந்துறை.**

---

பல்லக்கில் வைத்துக்கொண்டு மந்திரிப் பிரதானிகள் பின் தொடர்ந்து வந்தார்கள்.

## 3

அரண்மனை வைத்தியர்களுக்கு நம்பிக்கையில்லை. நாளுக்கு நாள் சந்திரவர்மனுடைய நிலைமை மோசமாகி வரத் தொடங்கியது. நாட்டிலுள்ள வைத்திய நிபுணர்கள் எல்லாம் வந்து பார்த்து, கைவிட்டு விட்டார்கள்.

அரசனே தன் நிலையை உணர்ந்து கொண்டுவிட்டான். அருளேந்தியையும் செங்கோடனையும் அழைத்து அந்தரங்கமாக ஏதோ ஆலோசனை நடத்தினான். ராஜகுமாரி இந்துமதியின் கவலையே அவனுக்குப் பெரிய கவலையாக இருந்தது. அந்த இளம் பாலிகைக்கு ஏற்ற கணவன் இந்த ஐம்பத்தாறு தேசங்களிலும் எங்கே இருக்கிறான்?

அருளேந்தியிடம் அரசனுக்கு அபார நம்பிக்கை உண்டு. அவருடைய புத்தி கூர்மையையும் திறமையையும் அவனைப்போல் உணர்ந்தவர்கள் வேறு யாரும் இல்லை. அவர் உடனே அரசனைப் பார்த்து, "தங்கள் சகோதரியின் குமாரர்கள் இருக்கிறார்களே! அவர்களில் யார் தகுதி வாய்ந்தவனோ அவனுக்கு நம் இளவரசியைக் கொடுத்தால் நல்லது என்று தோன்றுகிறது" என்றார்.

அரசன் முகத்தில் புன்னகை அரும்பியது. அந்த எண்ணம் அவனுக்கு வெகு நாட்களாகவே இருந்தது. அதை எப்படியோ உணர்ந்து கொண்டு விட்டாரே இந்த மனிதர் என்று ஆனந்தம் கொண்டான் அரசன்.

"அவர்கள் இரட்டையர்கள் ஆயிற்றே. ஒருவருக்கு ஒருவர் பகைமையோ பொறாமையோ இல்லாமல் இதை எப்படி நிர்ணயிப்பது?— அதுதான் எனக்குப் பெருங் கவலையாக இருக்கிறது" என்றான் சந்திரவர்மன்.

"நாளை இதற்கு முடிவும் ஒரு வழியும் சொல்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார் அருளேந்தி. மறுநாள் அதிகாலையில் ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவராக அரசனிடம் வந்தார்.

(தொடரும்)

# கம்பனி கலைந்தது

**எம். கே. எஸ்.**

சாரியும் கோபாலனும் பால்ய சினேகிதர்கள். கோபால் மட்டும் சிறு வயதிலிருந்தே பாடங்களைச் சரிவர படிக்காமல், துப்பறியும் கதைகளையும் நாவல்களையும் படித்து வந்தான். சாரிக்கு விளையாட்டில்தான் அதிகக் கவனமிருக்கும். இருவரும் எப்படியோ பத்தாவது பாஸ் செய்துவிட்டார்கள். துப்பறியும் நிபுணனாக வேண்டும் என்று கோபாலன் கனவு கொண்டிருந்தான். இருவருக்கும் உத்தியோகம் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே இருவரும் சேர்ந்து, துப்பறியும் கம்பனி ஒன்று ஏற்படுத்தத்



தீர்மானித்தார்கள். "சாரி-கோபால்; துப்பறியும் நிபுணர்கள்" என்று ஒரு போர்டு கோபால் வீட்டில் தொங்கவிடப்பட்டது.

ஆரம்ப தினத்தில் கோபால் சாரியைப் பார்த்து, "சாரி, அல்ப சொல்பமாயுள்ள கேஸ்கள் வந்தால் நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. பெரிய கொலைக்கேஸ், பிரபல திருட்டு என்றால்தான் நாம் துப்புத் துலக்க வேண்டும்" என்றான். அதற்குச் சாரியும் ஒத்துக்கொண்டான். விளம்பரம் மாட்டி ஒரு மாதம் ஆகிவிட்டது. ஓர் ஈ, காக்கைகூட அவர்கள் வீட்டை நாடி வரவில்லை. நிலைமை வரவர மோசமாகிவிட்டது. சிறிய திருட்டுக் கேஸ் வந்தால் கூடப் போதும் என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள். "என்ன அதிசயம்! பாப ஆத்மாக்களே உலகத்தை விட்டு ஒருமிக்க ஒழிந்துவிட்டார்களா? பரந்த தமிழ்நாட்டில் ஒரு கொலை, கொள்ளை, திருட்டுகூட நடக்கவில்லையா?" என்று சாரி தன் சிநேகிதனைப் பரிதாபகரமாகக் கேட்பான்.

எப்பொழுதும் ஒருவருடைய அதிர்ஷ்டசக்கரம் ஒரே மாதிரியாகப் போய்க்கொண்டிருக்காது அல்லவா? அதே மாதிரி ஒருநாள் சாரிக்கும் கோபாலுக்கும் நல்ல அதிர்ஷ்டப் புயல் அடிக்க ஆரம்பித்தது. அவர்கள் வீட்டு வாசலில் உள்ள விளம்பரப் பலகையைப் பார்த்து விட்டு, அவர்கள் அறையின் கதவைத் தட்டினார் ஒருவர். சாரியும் கோபாலும் கதவைத் திறந்து அவரை அறைக்குள் அழைத்து வந்து ஒரு நாற்காலியில் உட்கார வைத்தனர்.

"எங்கே கொலை நடந்தது?" என்றான் சாரி.

"இல்லையே. எங்கும் கொலை நடக்கவில்லை!" என்றார் வந்தவர்.

"ஒரு வேளை கொள்ளையா?" என்று வினவினான் கோபால்.

"அதுவும் இல்லை."

"அப்பொழுது கண்டிப்பாகத் திருட்டாகத்தான் இருக்கவேண்டும்" என்றான் சாரி.

"திருட்டின் மதிப்பு எத்தனை ஆயிரம்?" என்றான் கோபால்.

வந்தவர் சிறிது மென்று விழுங்கினார். "அவ்வளவு பிரமாதமான திருட்டு ஒன்றும் இல்லை. என்னுடைய அருமையான பூனைக்குட்டி ஒன்றைக் காணவில்லை. அது இங்கிலாந்திலிருந்து வந்தது. எனக்கு ஒரு துரை வெகுமதியாகக் கொடுத்தார். ரூபாய் இருநூறு கொடுத்தால்கூட அம்மாதிரி சீமைப் பூனைக்குட்டி அகப்படாது!" என்றார் வந்தவர்.

"அதனுடைய அங்க அடையாளங்களைச் சொல்லுங்கள்" என்றான் சாரி.

வந்தவர் அதைக் கூறிக்கொண்டிருக்கும் பொழுது, கோபால் தனது குறிப்புப் புத்தகத்தில் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டான்.

வந்தவர், "இந்தாருங்கள். இந்த நாற்பது ரூபாயை வைத்துக் கொள்ளுங்கள். இத்துடன் அந்தப் பூனைக்குட்டியின் போட்டோவும் இருக்கிறது. கண்டுபிடித்து எனது விலாசத்தில் சேர்த்துவிடுங்கள்" என்று கூறி, தனது அச்சடித்த விலாசத் துண்டொன்றைக் கொடுத்துச் சென்றார்.

சாரி கோடம்பாக்கம் வடபழனி வழியாகச் சென்றான். கோபால்



மாம்பலம் பாண்டி பஜார் வழியாகச் சென்றான். இவர்கள் தங்கள் திக்விஜயத்திற்கு முன்பாக அந்தப் பூனைக் குட்டியின் போட்டோவைப் பார்த்து, அதன் உருவத்தையும் அங்க அடையாளங்களையும் மனத்தில் நன்றாகப் பதிய வைத்துக் கொண்டார்கள். சாரியைப் பார்த்து, "யாருக்குப் பூனைக் குட்டி கிடைத்தாலும், நம் ரூமுக்கு வந்துவிட வேண்டும். அதைச் சொந்தக்காரரிடம் போய்ச் சேர்க்கும் பொழுது, இரண்டு பேரும் சேர்ந்து போகவேண்டும்" என்றான் கோபால். சரி என்றான் சாரி. இருவரும் ஒவ்வொரு கடை, சந்து, பொந்து, சாக்கடை விடாமல் சோதனை செய்துகொண்டே சென்றார்கள். கோபால் ஒரு வீட்டு வாசவில், போட்டோவில் பார்த்த அங்க அடையாளமுடன் கூடிய ஒரு பூனைக்குட்டி படுத்துக் கொண்டிருந்ததைக் கண்டு விட்டான். ஆனந்தக் கண்ணீர் வடித்துக்கொண்டே அதன்மீது தாவி, அதன் பிராண்டலுக்குப் பயப்படாமல் தனது பைக்குள் பிடித்துப் போட்டுக்கொண்டு தன் வீட்டை நோக்கி நடந்தான்.

'பாவம், சாரி எப்படி அவஸ்தைப்பட்டுக் கொண்டு இருக்கிறானோ! இந்தப் பழி என் பையில் கிடக்கிறது!' என்று கோபால் அங்கலாய்த்துக் கொண்டான். வீட்டு வாசலை அடைந்த கோபாலனுக்கு, தனது அறையில் ஒரு பூனைக்குட்டி கத்துவதைப் போலிருந்தது. தனது பையில் கிடக்கும் குட்டிதான் கத்துகிறதோ என்ற சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டது. ஆவேசத்தோடு ரூமுக்குள் சென்றான். சாரியின் மடியில் படுத்துக்கொண்டு ஒரு பூனைக் குட்டி, "மியாவ், மியாவ்" என்று கத்திக்கொண் டிருந்தது. கோபாலைக் கண்டவுடன் சாரி சந்தோஷமாக, "கோபால்! இந்தப் பூனைக் குட்டியை, கோடம்பாக்கத்தில் வடபழனிக்குப் போகிற வழியில் உள்ள ஒரு பள்ளிக்கூட வாசலில் கண்டேன். நான் உடனே பைக்குள் திணித்துக்கொண்டு ஓட்டமாக வந்துவிட்டேன். நீ எங்கெங்கு

அலைந்துகொண்டு இருக்கிறாயோ என்று என் மனசு அடித்துக்கொண்டிருந்தது'' என்று கூறினான்.

அப்பொழுது கோபால் பையிலுள்ள பூனைக்குட்டி, இதுவரையில் சும்மாயிருந்தது; உடனே 'மியாவ்' என்று சத்தம் போட்டது. ''மாம்பலத்தில் பாண்டி பஜாரில் உள்ள ஒரு தெருவில், ஒரு வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டிருந்தது'' என்று கூறிக் கொண்டே பூனைக்குட்டியைப் பையிலிருந்து எடுத்துத் தன் மேஜையின் மேல் வைத்தான். அதைப் பார்த்ததும் சாரி சும்மாயில்லை. ''நான் கொண்டு வந்த குட்டிதான் அவருடையது. இதோ பார்! போட்டோவில் உள்ள அங்க அடையாளங்களுக்கு எல்லாம் ஒத்தமாதிரியாயிருக்கிறது. நீ ஏதோ 'கண்ட்ரி' பூனைக்குட்டியைப் பிடித்து வந்துவிட்டாயே!'' என்று கூறி, கேலி செய்தான்.

கோபாலுக்குக் கோபம் வந்துவிட்டது. ''நான்சென்ஸ், நீ கொண்டுவந்த பூனைக்குட்டிதான் ஒரு 'கண்ட்ரி'. இதோ பார்! போட்டோவில் இருக்கும் அடையாளங்கள்! இரண்டு தாடைகளிலும் கறுப்புச் சுழிகள். வயிற்றில் இரண்டு கறுப்புக் கோடுகள். அடர்ந்த வால்'' என்றான்.

''அந்த அடையாளங்களுக்கெல்லாம் என் குட்டி ஒன்றும் சளைக்கவில்லை. இதுதான் 'ஒரிஜினல்' என்று சாதித்தான் சாரி.

''சரிதான். அப்படியென்றால் நம்மிடம் வந்த 'கிளையன்ட்' (கட்சிக்காரர்) இரண்டு சீமைக் குட்டிகளையா வளர்க்கிறார்?'' என்றான் கோபால்.

''கோபால்! பெண்பூனை ஒரு தடவையில் நான்கு குட்டிகள் போடும் என்று நாம் படித்ததில்லையா? அம்மாதிரி ஒரு பூனையின் குட்டிகளாக இருக்கலாம். அவருக்குக் கொடுத்த அதே சீமைதுரை வேறு யாருக்காவது இன்னொரு குட்டியைக் கொடுத்திருக்கலாம். அது போகட்டும். அவரிடம் நாம் இருவரும் இந்த இரண்டு குட்டிகளையும் எடுத்துக் கொண்டு போய்க் காண்பித்துவிடலாம். அவரே தன்னுடையது எது என்று தீர்மானித்துக் கொள்ளட்டும்'' என்றான் சாரி.

* * *

''சார் சார்!'' என்று கதவு தட்டும் சப்தம் கேட்டது. கதவைத் திறந்ததும், காலையில் வந்த பெரியவர் உள்ளே நுழைந்தார். கோபாலையும் சாரியையும் பார்த்துக் கொண்டே, ''மன்னிக்க வேண்டும். காலையில் என்னுடைய பூனைக்குட்டியைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும் என்று கூறவில்லையா? என்னுடைய பூனைக் குட்டி அகப்பட்டுவிட்டது. யாரோ ஒருவர் வீட்டில் அதன் மேல் ஒரு கம்பளத்தைப் போட்டுப் போர்த்துவிட்டார்கள். குளிருக்குக் 'கம்'மென்று அது தூங்கிவிட்டது. இனி அதைத் தேடுவதில் நீங்கள் முயற்சிக்க வேண்டாம். வணக்கம்'' என்று கூறிச் சென்றார்.

சாரியும் கோபாலும் அப்படியே ஆகாயத்தைப் பார்த்தார்கள்! மறுநாள் கோபால்வீட்டிலிருந்த விளம்பரப் பலகையைக் காணவில்லை!



# பலாப்பழ வழக்கு

திருச்சி அண்ணா

[1 - பஞ்சாயத்தாரில் ஒருவர். 2 - மற்றொருவர். 3 - இன்னொருவர். கண்ணுசாமி - வாதி. தங்கராசு - பிரதிவாதி. பாலப்பன் - வாதியின் சாட்சி. சாமியப்பன் பிரதிவாதியின் சாட்சி.]

1: என்னாங்க, இந்த உலகத்திலே அரிதாவது எது? சொல்லுங்க, பார்க்கலாம்.

2: அரிது அரிது, மானிடராய்ப் பிறத்தல் அரிது.

3: மானிடராய்ப் பிறந்தாலும் பிறருக்கு உதவி செய்ய வேணும், பிறரை நேசிக்க வேணும் என்கிற மனசு இருக்குதே, அதுதான் அரிதுன்னு என் புத்திக்குப் படுது.

2: அது சரி. ஆனா இதைவிட பெரிய காரியம் ஒண்ணு உண்டு. அதாவது உபகாரம் செய்தவனுக்கு அபகாரம் எண்ணாதே. இதான் நான் சொல்லுவேன்.

3: அந்தக் கதை இருக்கட்டும். காரியத்தைக் கவனிக்கலாம். இப்ப கண்ணுசாமி உதவிக்குக் கூப்பிட, தங்கராசு உதவிக்குப் போனான். அவனே உபத்திரவத்திலே மாட்டி விட்டானே அந்தக் கண்ணுசாமி, இதுக்கு என்ன சொல்றீங்க?

1: அப்போ கண்ணுசாமி பேருலே தவறான்னு சொல்றீங்க?

2: அதை எப்படிச் சொல்ல முடியும்?

1: பின்னே எதுக்கு ரெண்டு பேரும் ஆர்ப்பாட்டம் பண்றீங்க? அதோ வாதிப் பிரதிவாதிகள் எல்லாரும் வந்தாச்சு.

2: ஆமா, பஞ்சாயத்துத் தொடங்கலாமே.

3: சத்தம் போடாதீங்க, ஐயா! பஞ்சாயத்துத் தொடங்கப் போவுது!

2: பெரியோர்களே, இன்றைய வழக்கில், வாதியான கண்ணுசாமி என்பவர் தமது நண்பர் தங்கராசுவிடம் ஓர் உதவி செய்யும்படி கேட்டாராம். தங்கராசு ஒப்புக் கொண்டாராம். ஆனால் கண்ணுசாமி கொடுத்த பொருளை, தங்கராசு என்பவர் மறைத்து விட்டதாக, கண்ணுசாமி வழக்குத் தொடர்ந்திருக்கிறார். தீர விசாரித்துத் தீர்ப்புக் கூறுவது நம் கடமையாகும்.

2: வாங்க ஐயா, கண்ணுசாமி! உங்கள் வாக்கு மூலம் என்ன?

**கண்:** நான் கடைத் தெருவுக்குச் சாமான் வாங்கப் போயிருந்தேன். நிறைய சாமான் வாங்கினேன். கடைசியிலே ஒரு பலாப் பழம் வாங்கினேன். பலாப்பழமின்னா எனக்கு ரொம்ப உயிரு.



3

அதிலே வைடமின் சத்து நிறைய உண்டுன்னு..

3: சரி, கதை இருக்கட்டும். நடந்த விஷயத்துக்கு வாங்க.

**கண்**: பலாப்பழம் வாங்கினேன். வாங்கி, துணி போட்டுக் கட்டினேன். சாமான் நிறைய இருந்ததனலே, அதை எடுத்துவர முடியலீங்க. எதிரே தங்கராசு வந்தான். எனக்கு நிறைய சாமான் இருக்கு. இந்த மூட்டையை மட்டும் நீ எடுத்துட்டுப் போய் என் வீட்டுலே சேர்த்திடுன்னு தங்கராசு கிட்டே சொன்னேன்.

2: மூட்டைக்குள்ளே பலாப்பழம் இருந்திச்சா?

**கண்**: ஆமாங்க. வெளியே தெரியாம வச்சுக் கட்டி யிருந்தேன்.

**தங்**: என்கிட்டே என்னடா சொன்னே?

1: இந்தாங்க, எப்போதும் 'டா' போட்டுப் பேசப் படாது.

2: (பாட்டாக) பேச்சிலே மரியாதை வேண்டுமேயடா - அதனல் டா போட்டு என்றுமே பேசாதேயடா.

3: டா, போடாதேன்னு பாட்டுலே டாவைப் போட்டுட்டிங்களே.

2: சரி, மேலே சொல்லுங்க, கண்ணுசாமி! பலாப்பழத்தை மூட்டை கட்டி, தங்கராசு கிட்டே குடுத்திங்க. அவர் வீட்டுலே கொண்டு போய்க் கொடுத்தாரில்லயா?

**கண்**: ஆமா. ஆனு மூட்டைக் குள்ளே கிழிஞ்சு போன பழைய கால் பந்து இருந்திச்சு. பலாப் பழத்தை அபேஸ் பண்ணிட்டான். இவனே நம்பிக் கொடுத்தேனே, இவன் இப்படிச் செய்யலாமா? நீங்களே கேளுங்க.



**தங்கராசு**: என்னே நம்பியா கொடுத்தே? பொய் பேசாதே.

2: சரி, கண்ணுசாமி, நீங்கள் போகலாம். தங்கராசுவைக் கூப்பிடப்பா.

**தங்**: இதோ இருக்கேனே. முந்தா நாள் கண்ணுசாமியைக் கடைத் தெருவுலே சந்தித்தது வாஸ்தவம். என்னிடம் அவன் மூட்டையைக் கொடுத்ததும் வாஸ்தவம். நான் ஜாக்கிரதையா வீட்டுலே கொண்டு சேர்த்ததும் வாஸ்தவம். ஆனல்,

மூட்டைக்குள்ளே குழந்தைக்காக வாங்கின கால்பந்து இருக்கிறதாச் சொன்னானே தவிர, இப்பதான் பலாப்பழமின்னு சாதிக்கிறான். என்னிடம் கால் பந்துன்னு சொன்னது உண்டா, இல்லையா? நீங்களே கேளுங்க.

**கண்:** நான்தான் ஒப்புக்கொண்டேனே. இவன் எடுத்துத் தின்னுட்டா என்ன செய்யறதுன்னு நினைச்சு அதுபோலச் சொன்னேன்.

**தங்:** என்னை நம்பாதவன், என்னை உதவிக்குக் கூப்பிடுவானேன்? அதிருக்கட்டுமுங்க. என்னிடம் சொன்னது கால் பந்து. நான் கொண்டு சேர்த்ததும் கால் பந்து! பிறகு, இதிலே வழக்காட என்ன இருக்கிறது?

**கண்:** இல்லீங்களே. மூட்டைக்குள்ளே பலாப்பழந்தான் வச்சேன். வேணுமின்னா பாலப்பனைக் கேளுங்களேன், சொல்லுவான்.

**1:** பாலப்பனைக் கூப்பிடய்யா.

**பால:** இதோ வந்தேனுங்க.

**2:** நீங்க என்ன சொல்றீங்க? கண்ணுசாமி அந்த மூட்டையிலே பலாப்பழம் வச்சுது உண்மையா?

**பால:** ஆமாங்க. அப்படித்தான் தெரியுது.

**3:** தெரியறது இருக்கட்டும். நீங்க பார்த்தீங்களா?

**பால:** ஆமாங்க. நான் பார்த்ததுண்டு.

**1:** என்ன தங்கராசு, இப்ப என்ன சொல்றே?

**பால:** அது பொய் சாட்சி. நான் மூட்டை வாங்கற போது, பாலப்பன் பக்கத்திலே இல்லவே இல்லை.



**பால:** ஆமா, அவன் பலாப்பழத்தை வாங்கி மூட்டை கட்டும்போது இருந்தேன்.

**தங்:** அதுவும் பொய். பாலப்பன் அன்னிக்கு ஊரிலேயே இல்லை. சாமியப்பனைக் கேளுங்க, தெரியும்.

**2:** யாரய்யா அது, சாமியப்பன்?

**சாமி:** இதோ வந்தேன். பஞ்சாயத்துக்கு வணக்கம். பாலப்பன் வீட்டுக்குப் பக்கத்து வீடு எனக்கு. முந்தா நாளுதான்

பாலப்பன் இரவு 9 மணி வண்டியிலே வந்தான். முதல் நாள், இந்த ஊரிலே இல்லே.

1: உனக்கு இது எப்படித் தெரியும்?

**சாமி:** அவன் பக்கத்து வீடு தானே எனக்கு! தவிர, எனக்காக ஊரிலேருந்து விளாம்பழம் வாங்கி வருவதாய்க் கூடச் சொன்னான். அதுக்கு அவன் வீடு போய் விசாரிச்சேன்.

2: என்னய்யா கண்ணுசாமி, இப்ப என்ன சொல்றே?



**முதல் பையன்: நாங்க ஆறு பேர் ஒரே குடையுடன் சென்றோம். ஒருத்தர் மேலும் ஜலம் துளிக் கூட விழவில்லே.**

**மற்றொருவன்: வெறும் புளுகு, அது எப்படி நடந்திருக்கும்?**

**முதல் பையன்: இல்லே, நிஜந்தான்....ஏனென்றால் அப்போ மழையே பெய்யவில்லேயே.**

**—மணி, மாயூரம்.**

3: அவரை என்னுங்க கேட்கறது? அவர் பேரிலேதான் குற்றம் இருக்கு. வீணு வழக்குத் தொடுக்கப்பட்டுக் குழப்பம் அடைந்த தங்கராசு முழு பலாப் பழம் தின்றுதான் சாந்தமடைய வேண்டும். வாதி கண்ணுசாமியும் வேலிக்கு ஒணன் சாட்சி போல் வந்த பாலப்பனுமாகச் சேர்ந்து, அந்தப் பலாப்பழத்தை வாங்கித் தரவேண்டும். இனியும் இம்மாதிரி வழக்கும் குழப்பமும் செய்யாதிருக்கும்படி சம்பந்தப் பட்டவர்களுக்கு எச்சரிக்கை.

1: என்ன கண்ணுசாமி, பலாப் பழம்..

**கண்:** ஏற்கனவே ஒண்ணு போச்சு. அதுக்கு வட்டியா இது?

2: நீதி மேடையில் தீர்ப்புக்குப் பணியாத பட்சத்திலே...

**கண்:** இல்லீங்க, தீர்ப்புப்படியே நடக்கிறேன்.

1: சரி, இனிப் பஞ்சாயத்து கலையலாம்.

தங்: தீர்ப்புக் கொடுத்தாச்சு, இல்லீங்களா? இப்பப் பஞ்சாயத்தாருக்கு ஒரு வார்த்தை. அந்த மூட்டையிலே கால் பந்து இருக்குன்னு கண்ணுசாமி சொன்னாலும், என் மூக்கு பலாப்பழம்தான் இருக்குன்னு சொல்லிச்சு.

2: அடடே, இதை அப்பவே சொல்லலியே!

தங்: வழக்குன்னு வந்தால், அந்த வார்த்தைதான்! என் மேலே நம்பிக்கை இல்லாமல், என்னே ஏமாளிப் பயல்னு நினைச்சானே கண்ணுசாமி, அவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கத்தான் இந்தக் காரியம் செய்தேன். அவன் சொன்னபடி கால் பந்



தையே உள்ளே வச்சுட்டேன். தோசிப் பலாப்பழம் வீட்டுலே கிடக்கு. எனக்கு வேண்டாம்.

**கண்:** இது துரோகந்தானுங் களே?

**தங்:** கண்ணுசாமிதான் எனக்குத் துரோகம் எண்ணினான். என்னிடம் உண்மையைச் சொன்னால் என்ன? ஒரு நம்பிக்கையான ஆளை, நாணயமான ஆளை நாணயக் குறைவா மதிச்சு, கோமாளித்தனம் பண்ணினானே, அதுக்கு மான நஷ்ட வழக்குப் போட்டால் என்னுங்க?

**2:** அடியம்மாடியோவ், வேண்டாமய்யா! இது போகட்டும். எப்படியாவது ராஜியாகிப் பழையபடி நண்பர்களாப்பழகுங்க. என்னய்யா வாதி?

**கண்:** என் மேலே தவறுதானுங்க! என்னை மன்னிச்சுடு, தங்கராசு!

**தங்:** உண்மையாக வருந்தினால், மன்னிக்கத் தயார்.

**1:** சபாஷ், இப்படித்தான் பிள்ளைகள் பழக வேணும். செய்த குற்றத்தை ஒப்புக் கொண்டு மன்னிப்புக் கோருவது உயர்ந்த குணம்.

**3:** என்ன தங்கராசு, அப்போ அந்தப் பலாப்பழத்தை..

**தங்:** கண்ணுசாமிக்கே கொடுத்துடறேன்.

**கண்:** பாதி கிடைச்சால் போதும். மறுபாதி தங்கராசுவுக்கு.

**3:** சபாஷ்! இனி, பஞ்சாயத்து கலையலாம்.

# எல்லாம் நன்மைக்கே



'ஜாணு'

### காட்சி 1

[அப்பா வாசல் பக்கம் சாய்வு நாற்காலியில் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய பையன்கள் சுத்த வால்கள் ஆதலால் வெளியில் போய் விளையாட அனுமதிக்கவில்லை. கேரம் போர்டை வைத்து அந்த மூன்று வால்களும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.]

**ராஜா:** அப்பா, நீயும் உட்காரப்பா. நாலு பேராக ஆடலாம். மூன்று பேர் ஆட முடியவில்லை.

**அப்பா:** ஆட முடியவில்லையானால் ஆளுக்கு நாலு கணக்கு போட்டுத் தருகிறேன், போடுங்கள்.

**ரமணி:** ஏண்டா ராஜா, அப்பாவை 'டிஸ்டர்ப்' பண்ணுகிறே? எனக்கு மூன்றுபேர் ஆடக்கூடிய ஆட்டம் ஒன்று தெரியும். அப்பா நீ படிப்பா. தொந்தரவு பண்ணவில்லை.

[அப்பா சிரித்துக் கொள்கிறார். பையன்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொள்கிறார்கள். வராகசாமி தன் பிள்ளை வரதராஜனைக் கைபிடித்து அழைத்துக்கொண்டு வருகிறார்.]

**அப்:** டேய், பையன்களா! நாலாவது ஆசாமி வேண்டும் என்றீர்களே. அதோ வரதராஜன் வருகிறான்.

**ரா:** அப்பா; ஆட்டமே சுவாரசியம் இல்லை. நாங்கள் உள்ளே போய்ப்படிக்கிறோம், அப்பா.

[மூவரும் போய் விடுகின்றனர். வராகசாமி வாசற்பக்கம் நெருங்குகிறார்.]

**அப்:** வாருங்கள், வாருங்கள். அத்திப் பூத்தாற்போல..

**வராகசாமி:** அத்தி பூத்தாற் போல இல்லை. ஆத்திரம் வந்தாற் போல. இந்த வராகசாமிக்குக் கோபமே வராது. வந்தால்..

**அப்:** காண்பிக்கிற இடத்தில் காட்ட மாட்டாராக்கும். ஆமாம், என்ன சமாசாரம்?

**வரா:** பாருங்கள், என் பையன் கையை.

**அப்:** இப்போதான் நான் ரேகை பார்ப்பதையே விட்டு விட்டேனே. ஒரு காலத்தில் அதை 'ஹாபியாக' வைத்துக் கொண்டிருந்தேன்.

**வரா:** (கோபத்துடன்) உம்மை நான் ரேகை பார்க்கச் சொல்லவில்லை. என் பையன் கை அப்படியே அப்பளக் குழவிபோல நடுவில் பருத்துக் கிடக்கிறதே, அதைப் பாரும் என்றேன்.

**அப்:** (பார்த்து விட்டு) அட பாவமே! ஆமாம். உள்ளே எலும்பு முறிஞ்சிருக்கிறது. எங்கே விழுந்தான்?

**வரா:** எங்கேயும் விழவில்லை. உங்கள் பையன்கள் கண்ணில் விழுந்தான். அவ்வளவுதான்.

**அப்:** என்னது? என் குழந்தைகள் அவனை என்ன பண்ணினார்கள்?

**வரா:** குழந்தைகளா? குரங்குகள். இவனைக் கீழே தள்ளிக்

கையை இப்படி மிதித்திருக்கிறார்கள்.

அப்: ஆகா, அப்படியா சமாசாரம்? ஏய் ராஜா..ரமணி.. விச்சு..வாருங்கள், இப்படி.

அம்மா: எல்லாரும் புழக்கடைப் பக்கம் ஒளிந்து விளையாடப் போவதாகச் சொல்லிப் போனார்கள்.

வரா: என் தலையைக் கண்டதுமே ஒளிந்து விளையாட ஆரம்பித்துவிட்டார்கள் போலிருக்கிறது!

அப்: நான் போய் இழுத்து வருகிறேன்.

[சிறிது நேரத்தில் சும்மா வருகிறார்.]

வரா: எங்கே பயல்களைக் காணோம். ஓடி விட்டார்களா?

அப்: ஆமாம் ஆமாம். புழக்கடைச் சுவர் ஏறிக் குதித்து ஓடி விட்டார்கள் போலிருக்கிறது. ஆமாம். நடந்த விஷயத்தைச் சொல்லுங்கள்.

வரா: என் பையன் உங்கள் பையன்களோடு பள்ளிக்கூடத்திலிருந்து வந்து கொண்டிருந்தான். வருகிற வழியிலே பச்சைக்குதிரை தாண்டுகிற ஆட்டம் ஆடியிருக்கிறார்கள். என் பையன்மேல் உங்கள் மூன்று பையன்களும் விழுந்து கையை முறித்து விட்டார்கள்.

அப்: விளையாடினது எல்லாருடைய பேரிலும் தப்பு. எங்கள் பையன்கள் சாமர்த்தியசாலிகள். அடிபட்டுக் கொள்ளவில்லை.

வரா: ஆட்டத்தில் அடிபட்டுக் கொள்ளவில்லையே தவிர என் கையில் அடிபடாமல் தப்பிவிடப் போகிறார்களா? என் ஒரே பையன் வரதராஜு. அவன் கையை இப்படி முறித்து விட்டான்களே. நாளை மறுதினம் பரீட்சை வேறு. இடது கையை முறித்திருந்தாலும் பரவாயில்லை.

அப்: ஞாபகமாக என் பையன்கள் கையை நீங்கள் முறிக்கும் போது இடது கையைப் பார்த்து முறியுங்கள். அவர்களுக்கும் நாளை மறுதினம் பரீட்சை.

வரா: (கோபத்துடன்) உங்களுக்கு விளையாட்டாக இருக்கிறது போலிருக்கிறது. மறுபடியும் ராத்திரி பத்துமணிக்காவது வந்து உங்கள் பையன்களைக் கவனித்துக்கொள்கிறேன்.

அப்: (கோபத்துடன்) என்னவோ பெரிய மனிதன் ஆயிற்றே என்றால் வெகுவாக மிரட்டுகிறீர்களே! விளையாட்டில் அடிபட்டால் பட்டதுதான். என் பையன்கள்மேல் உங்கள் கைபட்டால் கையை முறித்து விடுவேன். ஜாக்கிரதை!

வரா: என்ன அது? மகன்களுக்கேற்ற தகப்பனாகத் தானே இருக்கிறீர்! அவர்கள் தான் கையை முறித்தார்கள் என்றால் நீருமா என் கையை முறிப்பீர்? இன்னொரு தரம் சொன்னால் பல்லைத் தட்டிவிடுவேன். மரியாதை கொடுத்து மரியாதை வாங்குங்கள்.

ராஜா: (இவ்வளவு நேரம் உள்ளேயே ஒளிந்துகொண்டிருந்தவன்) உதை கொடுத்து உதை வாங்குங்கள், அப்பா.

வரா: (திடுக்கிட்டு) என்ன உங்கள் பையன்கள் உள்ளேயே இருக்கிறார்கள் போலிருக்கிறதே. நீங்கள் பொய்தான் சொன்னீர்களா?

**அப்:** நான் எது வேணுமானுல் சொல்வேன். என் பையன்களை உங்கள் பையனை விட்டு வேண்டு மானுல் சாமர்த்தியமிருந்தால் அடிக்கச் சொல்லுங்கள். நீர் கை வைத்தால் போலீஸ் கம்ப்ளேண்ட் தான்.

[உள்ளேயிருந்த மூன்று வால் களும் வெளியே தைரியமாக வந்து விடுகின்றனர்.]

**ரா:** அப்பா, டோன்ட் ஒர்றி. வரதராஜு எங்களை அடிக்க இன்னும் குறைந்தது ஆறுமாதமா வது ஆகும். ஒடிந்த கை குணமாக வேண்டும் அல்லவா?

**வரா:** (கோபத்துடன்) என் தெருப்பக்கம்தானே இந்தப் பயல் கள் போவார்கள். பேசிக் கொள் கிறேன்.

[மகனை அழைத்துக் கொண்டு கோபத்துடன் கிளம்பி விடுகிறுர்.]

**அம்:** எனக்கு ஒரே பயமாக இருக்கிறது. அந்த வராகசாமி முரடனுச்சே. நம் பையன்கள் மண்டையை எங்காவது உடைத்து விட்டால்?

**அப்:** நம் பையன்களுக்கும் குறி உண்டு. கை உண்டு. காலில் பலம் உண்டு. கவலைப்படாதே, போ!

## காட்சி 2

[பள்ளிக்கூடத்துக்குப் பரீட் சைக்குச் சென்ற பெரிய பையன் ராஜா தலையில் பலத்த ரத்தக் காயத்துடன் வருகிறுன். அம்மா வும் அப்பாவும் பதறிப் போகிறுர் கள்]

**அம்:** எனக்கு அப்பொழுதே தெரியும். நம் பையன் தலையில் அந்த வராகசாமி அடித்து விடு வான் என்று என் தலையிலடித்துக் கொண்டேனே!

**அப்:** ஏண்டா ராஜா, என்னடா இது? அந்த வராகசாமி பண்ணினுனு? இப்பொழுதே அந்த வராகசாமியை..

**ரா:** அப்பா..பொறு! தன் வினை தன்னைச் சுடும் என்பதுபோல, நான் மாமரத்தின்மேல் கல்லை விட்டெறிந்தேன். அது திரும்பி வந்து தலையைத் தாக்கிவிட்டது.

**அப்:** உன்னை என்ன செய்தால் தகும்? பரீட்சைக்குப் புறப்பட்ட வன் ஒழுங்காகப் பரீட்சை எழுதப் போகாமல் என் மாந் தோப்புவழியாகப் போக வேண்டும்?

**ராஜா:** அந்த வராகசாமிக்குப் பயந்துகொண்டு வழக்கமாகப் போகிற வழியைவிட்டு மாந் தோப்பு வழியாக மூன்று பேரும்



போனோம். முதல் இரண்டடிக்கு இரண்டு காய் விழுந்தது. நான், "போதுமாடா?" என்றேன். ரமணி கேட்காமல், "இன்னொரு அடி அடித்துவிடு. மூன்று பேருக்கும் தலைக்கு ஒரு காய் கிடைத்துவிடும்" என்றான்.

அப்பா: இரண்டு தலைக்கு மாங்காயும் ஒரு தலைக்கு காயமும் கிடைத்தது போலிருக்கிறது. இந்தமாதிரி வால்களைப் பெற்றாளே!

அம்மா: எல்லாம் நீங்கள் கொடுக்கிற இடம். இந்தமாதிரி வராகசாமி பையன் கையை ஒடிப்பானேன்? அவனுக்குப் பயந்துகொண்டு மாந்தோப்பு வழியாகப் போவானேன்? போன வருஷமே இவன் பெயில் - இந்த வருஷம் எழுதாமல்....

ராஜா: போன வருஷம் பரீட்சை எழுதி ரிஸல்ட் தெரிந்த பிரகு அப்பாவிடம் அடி வாங்கினேன். இந்த வருஷம் பரீட்சை எழுதுவதற்கு முன்னாலேயே அடி வாங்கிக்கொண்டுவிட்டேன்.

அம்மா: போதுமடா உன் ஹாஸ்யம்! மண்டையிலே ரத்தம் ஒழுகறது; மண்டையே பிளந்துவிட்டது போலல்லவா பெரிய காயமாக இருக்கிறது!

அப்பா: அந்தப் பிளவு வழியே பார், மூளை என்ற வஸ்து அங்கு இருக்கிறதா என்று. இவர்களால் மனக்கஷ்டம், பணக்கஷ்டம்.




ராஜா: அப்பா, வருத்தப்படாதே. இந்த மண்டைக் காயம் எனக்குச் சுண்டைக்காய் போல. ஆனால் இந்தக் காயத்தினால் நான் பரீட்சை எழுதாமலே பாஸ் பண்ணிவிடுவேன், அப்பா.. நீ மட்டும் மனசு வைத்தால்.

அப்பா: (ஆச்சரியத்தோடு) அதெப்படி? நீ என்ன சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன்.

ராஜா: ஹெட்மாஸ்டரிடம் நேராகப்போ. நானும் இப்படியே ரத்தம் கசியற மண்டையோடு வருகிறேன். பரிதாபத்தை அவர் கண்ணால் பார்த்துப் பாஸ் கொடுத்துவிடுவார். ரொம்ப இளகிய மனசு அவருக்கு. போறாத குறைக்கு நான் போன வருஷம் பெயில் என்ற விஷயத்தையும் சொல்லு. கட்டாயம் நான் பாஸ் பண்ணிவிடுவேன். இப்போதே புரப்படு.

அப்பா: ஆச்சரியமான பிளான். இதோ புரப்பட்டேன்!

அம்மா: ஏதாவது மருந்து கட்டித் தொலேத்துக் கொண்டு போயேண்டா.

ராஜா: உஸ்..எதுவும் கூடாது. மருந்து கட்டி விட்டால் காயத்தின் மதிப்பே போய்விடாதா?

[அப்பாவும் பிள்ளேயும் ஹெட்மாஸ்டரைக் காணக் கிளம்புகிறார்கள்.]

காட்சி 3

[அப்பா, ராஜா, ரமணி, விச்சு, அம்மா ஆகியோர் உட்கார்ந்து சிரிக்கச் சிரிக்கப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

---




"எங்கேடா பள்ளிக்கூடம் போகாமல் மழையிலே நனேஞ்சு ஊரெல்லாம் சுத்திட்டு வரே?"

"ஊரெல்லாம் சுத்தலேயப்பா. மழை பெஞ்சதினுலே, பள்ளிக்கூடம் இருக்கா இல்லேயான்னு பார்க்கப் போயிருந்தேன்."

—ராமு, மதுரை.

அப்பா: நம்ம ராஜா சொன்ன பிளான் பிரமாதம்! அப்படியே நடந்துடுத்து.

ராஜா: நான் இந்த வருஷம் பரீட்சை எழுதியிருந்தால் பெயில் அல்லவா ஆகியிருப்பேன்?

ரமணி: ஹெட்மாஸ்டர் ராஜாவுக்குப் பாஸ் கொடுத்ததைப்பார்த்தால் நான்கூட இப்போதே மாந்தோப்புக்குக் கல்லேத் தூக்கிக் கொண்டு ஓடலாமெனத் தோன்றுகிறது.

அப்பா: (திடீரென்று) அதோ யாரது? வராகசாமிபோல இருக்கிறதே. டேய் பயல்களா! எல்லாரும் உள்ளே போங்கள்.

[பையன்கள் மறைகின்றனர். வராகசாமி சிரித்த முகத்துடன் வாசற்படியை நெருங்குகிறார். வணக்கம் செலுத்துகிறார்.]

வராகசாமி: அன்றைக்கு நடந்த விஷயத்துக்கு ரொம்ப வருத்தப்படுகிறேன். நம்ப சிநேகிதம் எவ்வளவு நாளேய சிநேகிதம்!

அப்பா: எனக்குக்கூட ரொம்ப வருத்தம்தான். இப்போ ஏதாவது கைமாற்று உங்களுக்கு வேண்டியிருக்கிறதோ? என் பையன்கள் மேல் கோபம் இல்லேயே.

வராக: சே சே..அவர்கள் மேல் அந்த நிமிஷத்துக்குக் கோபம்; அவ்வளவுதான். அவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று மாம்பழங்கள்கூட வாங்கி வந்திருக்கிறேன்.

அப்பா: ஏது, இவ்வளவு திடீர் மாறுதல்? ராஜா!

ராஜா: (உள்ளிருந்தபடியே) அப்பா, நம்பாதே!



**வராக:** சே சே..உங்கள் பையன்கள் எனக்கு மகத்தான உபகாரம் பண்ணினர்கள். அதற்கு நன்றி செலுத்தவே வந்தேன்.

**அப்பா:** என் பையன்களா? அவர்களுக்கு உபத்திரவம்தான் பண்ணத் தெரியும்.

**வராக:** என் பையன் கையை முறித்துவிட்ட உபகாரத்தைச் சொல்கிறேன். நான் ஹெட் மாஸ்டரிடம் போய் அந்தக் கை முறிவையே ஒரு காரணமாகச் சொல்லி, எப்படியாவது பாஸ் பண்ணிவைக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். இந்த வருஷம் எழுதியிருந்தாலும் பெயில்தான் ஆவான் என்பது நிச்சயம். எப்படியோ பாஸ் பண்ணவைத்த பெருமை உங்கள் பையன்களைச் சேரும். குழந்தைகளா, வந்து பழத்தை எடுத்துக் கொள்ளுங்கள்! நான் புரளிக்குச் சொல்லவில்லை.

**அப்:** (ஆச்சரியத்தோடு) உங்களுடைய கோபமே அன்று இல்லையென்ருல் என் பயல்கள் மாந்தோப்புப் பக்கம் போயிருக்க மாட்டார்கள். இப்போது அந்த மக்கு ராஜா பாஸ் பண்ணி யிருக்கவும் மாட்டான். எல்லாம் நன்மைக்கே.

**வரா:** எனக்கு விஷயம் புரியவில்லையே.

**அப்:** எல்லாம் புரியும்படி அப்புறம் சொல்கிறேன். நீங்கள் இன்று எங்கள் வீட்டிலேயே சாப்பிட்டுவிட்டுப் போகவேண்டும்.

[உள்ளேயிருந்த பையன்களும் இப்போது தைரியமாக வெளியே வந்துவிடுகின்றனர்.]

**ராஜா:** ஆமாம் மாமா. நீங்கள் சாப்பிட்டுப் போகத்தான் வேண்டும். நான் பாஸ் பண்ணினதற்கு உங்களுக்குப் 'பார்ட்டி.'

**அம்:** நீங்கள் அவசியம் சாப்பிடவேண்டும்.

**வரா:** சந்தோஷமாய் வருகிறேன்.

(சாப்பிடப் போகிருர்கள்.)

[திரை]

# காளி - மனைவி

**கி. ரா.**

இந்தக் கதையில் வருகிறது எல்லாம் நிஜமாக நடந்தது தானு என்று கேட்டால் நிச்சயமாக எனக்குச் சொல்லத் தெரியாது. ஆனல் எனக்கு இந்தக் கதையைச் சொன்னவர்கள் இது வெகு காலத்துக்கு முந்தி உண்மையாகவே நடந்ததாகச் சொன்னர்கள். எப்படியிருந்தால் நமக்கு ஆவது என்ன? கதையை நாம் இப்போது கவனிப்போம்.

எங்கேயோ மேற்கத்தி நாட்டில் ரொம்ப நாளைக்கு முந்தி சோனி, சோனி என்று ஒருவன் இருந்தான். (அவனுடைய முழுப் பெயர் சோணசலம்.) ஆள் பார்வைக்கு ஜோராக இருப்பான். நல்ல நிறம். அந்தச் சோனிக்கு ஒரு மனைவி. அவளுக்குக் காளி என்று பெயர். வக்கிரப் பல்லும், பறட்டைத் தலையும் காளி பெயருக்கேற்றற்போல் காளியாகவே காட்சியளித்தாள். அதோடு குணமும் அப்படி. வந்த சண்டையை விடமாட்டாள்; வலுச் சண்டையையும் விடமாட்டாள். அதனல் அவளைக் கண்டால் ஊரே பயப்படும்.

சோனிக்கும் அவளிடம் பயம் தான். பயம் என்றல் அப்படி இப்படி அல்ல; காளி வருகிருள் என்று சொன்னல்போதும்; ஒரே ஓட்டம்தான்.

அவள் கூப்பிட்டு, "சாப்பிடு!" என்றல் சாப்பிடுவான். "எழுந்து போ!" என்றல் போவான். அவள் சொன்னபடி கேட்கவில்லையோ, அவன் பாடு அதோகதிதான்.

சோனிக்கு அப்படி வேலை என்று ஒன்றும் கிடையாது. யாராவது ஏதாவது வேலை சொன்னல் கேட்பான். மூட்டை முடிச்சுகளைத் தூக்கிப்போவது, மாடுகளை மேய்த்துக் குளிப்பாட்டுவது, மண்வெட்டியை எடுத்துக் கீரைப் பாத்தி வெட்டுவது - இப்படி இல்லையா, சில்லறை வேலைகள்! ஆனல் எந்த வேலையானுலும் மனைவியின் உத்தரவில்லாமல் செய்ய மாட்டான். வேலைக்குக் கூலி யெல்லாம் பேசி வாங்கிக் கொள்வது அவள்தான்!

ஓர் இடத்திலும் வேலை இல்லாதபோது ஆற்றங்கரை அரசமரத்தடியில் உட்கார்ந்து ஆகாயத்தை அண்ணந்து பார்த்துக்கொண்டே, "கடவுளே, என்னைத்தான் படைத்தாயே, இந்தக் காளியையும் ஏன் படைத்தாய்?" என்று ஏங்குவான்.

அப்படித்தான் ஒரு நாள் ஆற்றங்கரை அரச மரத்தடியில் சோனி ஆகாயத்தைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அப்போது எங்கிருந்தோ 'கொடக்' என்று ஒரு சத்தம் கேட்டது. ஒரு தவளையை ஒரு பாம்பு கவ்விக்கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் சோனிக்குப்




பாவமாயிருந்தது. உடனே ஒரு கல்லை எடுத்து அந்தப் பாம்பின் மேல் வீசி எறிந்தான். பாம்பு 'களக்' என்று தவளையை விட்டு விட்டு ஓடிப்போய்விட்டது. அப்போதுதான் ஒரு பெரிய அதிசயம் நிகழ்ந்தது. அந்தத் தவளை ஒரு பிரம்மாண்டமான பூதமாக மாறி, பூமிக்கும் ஆகாயத்துக்குமாய் நின்றது.

அந்தக் கரும் பூதத்தை அண்ணாந்து பார்த்தான் சோனி. அவனுக்குப் பயமாக இல்லையா என்றுதானே கேட்கிறீர்கள்? அதுதான் இல்லை. அவனுடைய பயம் எல்லாம் காளியைக் கண்டதும் ஒன்று சேர்ந்துவந்து விடுவதனால் வேறு எதைக் கண்டாலும் அவனுக்குப் பயமே உண்டாவது கிடையாது.

அந்தப் பூதத்தைப் பார்த்துச் சோனி, "நீ யார்?" என்றான்.

அந்தப் பூதம் இடிபோன்ற குரலில் சிரித்துவிட்டுத் தலையைக் குனிந்துகொண்டு பின்வருமாறு சொன்னது: "அப்பனே! நான் தான் பூதம். ஒரு சாபத்தினால் தவளை உருவத்தில் இத்தனை காலம் இருந்தேன். உன்னால் என்னுடைய சாபம் விமோசனம் ஆயிற்று. ஆகையினால் நீ கேட்ட வரத்தைக் கொடுப்போம். உனக்கு என்ன வேண்டும்?"

அதைக் கேட்ட சோனி சும்மா நின்ருன்.

"உன்னை இந்த ராஜ்யத்துக்கு அரசனுகச் செய்து விடவா?" என்று கேட்டது பூதம்.

சோனி, "வேண்டாம்" என்ருன்.

"ஒரு பெரிய நவரத்தினக் கப்பலை உனக்கு இனமாகக் கொடுக்கட்டுமா? உலகத்திலேயே மிகவும் அழகான பெண்ணைக் கல்யாணம் செய்து வைக்கட்டுமா?" - இப்படி இன்னும் என்ன என்னவோ பெரிய பெரிய சமாசாரங்கள் எல்லாம் கேட்டது பூதம்.

சோனி மெதுவாகச் சிரித்துக் கொண்டு, "எங்கே, நன்ருகக் குனி. உன் காதோடு சொல்கிறேன். எனக்கு வேண்டியது ஒன்றே ஒன்று தான். அதாவது, என்னை என்னுடைய மனைவியிட மிருந்து எவ்வளவு தூரத்தில் கொண்டுபோய் விட முடியுமோ அவ்வளவு தூரத்தில் கொண்டுபோய் விடவேண்டும். இது உன்னுல் செய்ய முடிந்தால், செய். இல்லையானுல் நான் சொன்னதை மறந்துவிட்டுப் போய்விடு" என்ருன்.

"சரி, கண்ணை மூடிக் கொள்!" என்றது பூதம்.

சோனி கண்ணை மூடிக் கொண்டான். எங்கேயோ காற்றில் பறப்பதுபோல் இருந்தது. அப்படியே அந்தச் சுகத்தில் அவன் தூங்கியே போய்விட்டான்.

ரொம்பத் தூரத்துக்கு அப்பால், பல காடுகள், மலைகள், நதிகள், கடல்கள், எல்லாவற்றையும் கடந்து ஓர் அந்நிய தேசம். அந்தத் தேசத்தின் அரண்மனைக்குப் பக்கத்தில் ஒரு நந்தவனம். சோனியை அந்த நந்தவனத்தில் கொண்டு போய்விட்டது பூதம்.

பொழுது விடிந்தது. சோனி வழக்கம்போல் கண் விழித்தான். "என்ன இன்னும் தூக்கம்! எழுந்திரு! சோம்பேறி!" என்று காளியின் பயங்கரக் குரலை எதிர்பார்த்தான். ஆனுல் அதற்கு நேர்மாருக மிக இனிமையாக ஒரு வீணையின் நாதம் காற்றில் மிதந்து வந்தது. சோனி சொக்கிப்போய் மறுபடியும் தூங்கிவிட்டான்.



வெகு நேரம் சென்றபின் ராணி, தன் பரிவாரங்கள் புடை சூழ நந்தவனத்திற்கு வந்தாள். ராணி வரும்போது அவள் கூடவே அவளுடைய பெண்ணான இளவரசியும் வந்தாள்.

அந்தத் தேசத்தில் உள்ள ஆண்களைப் போல் அல்லாமல் வேறு மாதிரியாகவும், அழகாகவும் ஓர் ஆண் பிள்ளையைக் கண்டதும் எல்லோரும் பிரமித்துப் போய் நின்றார்கள். இதற்குள் அவன் கண்ணைத் திறந்து பார்த்தான். எதிரில் ஒரே பெண்கள் மயமாய்த் தெரிந்ததும் அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

அவன் விழித்துக் கொண்டதை யறிந்த ராணி அரண்மனைக்குத் திரும்பினாள். போகும் போது ராணி காவற்காரனிடம், "அதோ அந்த மனிதனை நமது சபைக்கு அழைத்து வா" என்று உத்தரவிட்டுப் போனாள். எல்லாருக்கும் கடைசியாக ராஜகுமாரி நடந்து போனாள். போகும் போதே திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள்.




இந்த உலகத்தில் சில பேருக்குக் கஷ்டம் வந்தால் மேலே மேலே வருகிறது; அதே மாதிரி அதிர்ஷ்டம் வந்தாலும் மேலே மேலே வருகிறது. மனைவியிடமிருந்து தப்பி கண் காணாச் சீமைக்கு வந்ததும் அல்லாமல், அங்கே ஒரு தேசத்து ராஜகுமாரியே அவனைப் பார்த்து ஆசை கொண்டாள் என்றால் அதை எப்படித்தான் சொல்வது!

அப்படியே அதை ராஜா ஒப்புக் கொண்டுவிட்டாரா என்றால், அது தான் ஆச்சரியம்! அவர் அப்படியே ஒப்புக்கொண்டு விட்டார்!

தன்னுடைய மகளை இப்படி ஓர் ஏழைக்குக் கொடுத்து விட்டால் அவன் அரண்மனையிலேயே இருப்பான், அல்லவா?

ஆகவே நம்முடைய சோனிக்கும் ராஜகுமாரிக்கும் கோலாகலமாக விவாகம் நடந்தேறியது.

அந்த அரண்மனையில் நடக்கும் உபசாரங்களும் சாப்பாடும் ராஜகுமாரியின் பணிவும், மரியாதையும் அவனைக் கவர்ந்து விட்டன. கல்யாணம் ஆன சில மாதங்களில் அவன் காளியை மறந்தே போய் விட்டான்.

இனி மேல் காளி என்ன ஆனாள் என்று கவனிப்போம்.

புருஷனைக் காணவில்லை என்றதும் முதலில் அவன்மேல் ஏற்பட்ட கோபம் எல்லாம் பின்னால்

அழுகையாக மாறிவிட்டது. எப்போதும் வீட்டில் உட்கார்ந்து அழுதுகொண்டே யிருந்தாள்.

இப்படி யிருக்கையில் அந்த ஊரில் உள்ள சில கிழவர்களும் கிழவிகளும் காசிமாதிரி உள்ள ஒரு க்ஷேத்திரத்திற்குப் புறப்பட்டார்கள். அதற்குப் போக வேண்டுமானால் ஆற்றில் படகில் போக வேண்டும். அவர்களுடன் காளியும் தீர்த்த யாத்திரைக்குப் புறப்பட்டாள்.

படகு புறப்பட்டது. இரண்டு நாளைக்கு எல்லாம் எங்கிருந்தோ ஒரு காற்று வேகமாக அடித்தது. அதனால் படகு நிலையாக நிற்காமல் வேகமாக ஆற்றுடன் அடித்துச் செல்லப்பட்டது.

காற்று அடித்ததுதான் அடித்ததே, அது படகைச் சமுத்திரத்திலேயா கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும்? குய்யோ முறையோ வென்று கத்திக்கொண்டு அனைவரும் மூழ்கிவிட்டார்கள்.

ஆனால் ஒரே ஓர் ஆசாமியை மட்டும் செம்படவர்கள் காப்பாற்றிக் கரைக்குக் கொண்டு வந்து விட்டார்கள். அந்த ஆசாமி யார் என்று நினைக்கிறீர்கள்? அதுதான் நம்முடைய காளி! அந்த ஊர்தான் நம்முடைய சோனி இருக்கும் ஊர்.

இவ்வளவும்தான் நடந்ததே, அது போதாதா! அன்றைக்கு என்று சோனி குதிரைமேல் ஏறிக்கொண்டு கடற்கரைக்கு உலாவ வரவேண்டுமா? அதைத்தான் தலைவிதி என்று சொல்லவேண்டும்! எதிரில் குதிரை மேல் ஓர் ஆள் வருவதைப் பார்த்து நின்று கவனித்தாள் காளி. உடனே புரிந்து விட்டது. சோனிதான்! அவளுடைய புருஷன்!

உடனே, "இந்தா! வ!" என்று கோபாவேசத்துடன் கத்திக்கொண்டு ஓடினாள். சோனியும் உடனே கண்டு கொண்டு விட்டான். அவனுக்குத் தெரியாதா காளியை? குதிரையைத் திருப்பி அரண்மனைக்கு ஓட்டினான்! காளியும் அவனை விடாமல் துரத்தினாள்.

அரண்மனைக்குள் போன சோனிக்கு ஒன்றும் புரியவில்லை. அவனுடைய தைரியம் எல்லாம் எங்கேயோ ஓடி விட்டது.

அவன் உடனே ராஜகுமாரியிடம் போய், "என்னுடைய காலம் மாறிவிட்டது. நான் போய் வருகிறேன்" என்று சொல்லி விட்டு வெளியே வந்தான். ராஜகுமாரிக்கு ஒன்றும் புரியவில்லை. திரும்பி வருவான் என்று திகைத்துப் போய் அப்படியே நின்றாள் அவள்.

அதற்குள் சோனி வெளியில் நின்றுகொண்டிருந்த காளியிடம் மெதுவாக, வாத்தியாரிடம் போகும் பள்ளிக்கூடப் பிள்ளையைப் போல் பயந்துகொண்டு போய் நின்றான்.

காளி கண்களில் நெருப்புப் பொறி பறக்க, "வா, என் கூட, நட!" என்று சொல்லி வேகமாக நடந்தாள். சோனியும் பின் தொடர்ந்தான்.

அப்புறம் என்ன? சோனியும் காளியும் பழையபடி தங்கள் ஊருக்கு வந்து சேர்ந்தார்கள். எப்படி வந்தால் என்ன? முடிவு எப்படியும் ஒன்றுதான். பழைய சோனி, பழைய சோனிதான்! பழைய காளி, பழைய காளிதான்!



# ராமேசுவரம் போனாலும் -

கே. கே. கோமளா

இடம்: மணியின் வீடு.

காலம்: காலை ஏழு மணி.

[மணி படித்துக்கொண்டிருக்கிறான்.]

**மணி:** பாபருக்கும் இப்ராஹீம் லோடிக்கும் பானிப்பட்டு என்னுமிடத்தில் 1526-ஆம் ஆண்டில்..

**அப்பா:** மணி! மணி!

**மணி:** இதோ வரேன், அப்பா!

**அப்:** அடே, நான் ஷேவ் பண்ணிக்கணும். சூடா ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வா, பார்க்கலாம்!

**மணி:** (மெதுவாக) அதற்கு நான் வரணுமாக்கும்! நீயே எடுத்துக்கப் படாதோ?

**அப்:** என்னடா சொல்றே?

**மணி:** ஒன்றுமில்லை, அப்பா! இதோ கொண்டுவரேன்னு சொன்னேன்.

(கொண்டு வந்து கொடுத்துவிட்டுத் திரும்பப் போய்ப் படிக்கிறான்.)

**மணி:** 1526-ஆம் ஆண்டில் ஒரு யுத்தம் நடந்தது. அதில் பாபரே வெற்றி....

**அம்மா:** மணி! டேய் மணி!

**மணி:** (உட்கார்ந்தவாறே) என்ன அம்மா?

**அம்:** எழுந்து வாடா என்றால்..

**மணி:** (எழுந்து போய்) என்ன அம்மா?

**அம்:** அதோ குழந்தை எழுந்துவிட்டாள் போலிருக்கு. சித்தே போய் அழைச்சிண்டு வாயேன்.

**மணி:** நான் படிக்....

**அம்:** ஆமாம்! நீ படிச்சுப் பாழாய்ப் போறது! போய் அழைச்சிண்டு வாடான்னா.

(போகிறான்.)

(மணி திரும்பவும் வந்து படிக்கிறான்.)

**மணி:** அதில் பாபரே வெற்றி பெற்றார். ஏனென்றால் அவர் துப்பாக்கிகளையும்....

**அண்ணா:** டேய் மணி! 'லாண்டரி'க்குப் போய், துணி வாங்கிண்டு வாடா!

**மணி:** போ, அண்ணா! நான் மாட்டேன். இன்னிக்கு ஹிஸ்டரி டெஸ்ட்.

**அண்:** எல்லாம் பரவாயில்லை. சும்மா கிளாஸ் டெஸ்ட்தானே?

**மணி:** எப்படியானாலும் நான் மாட்டேன்! நீயே போய் வாங்கிக் கொள்!

**அண்:** சரி! அப்படியா? அடுத்த இதழ் 'கண்ணன்' வாங்கப் பணம்




யார் தருகிறுன்னு பார்க்கலாம்!

**மணி:** சரி! சரி! போகிறேன்!

(போய்த்திரும்பி வந்து படிக்கிறுன்.)

**மணி:** ஏனென்ருல் அவர் துப்பாக்கிகளையும் குண்டுகளேவும் உபயோகித்தார்...

**அம்:** மணி! மணி!

**மணி:** இதோ வந்துட்டேன்! என்ன அம்மா?

**அம்:** கடைக்குப் போய் ஒரு படி உப்பு வாங்கிண்டு வா. சீக்கிரம்.

**மணி:** என்னம்மா நீ? அப்போ 'லாண்டரி'க்குப் போனேனே. அப்பவே கொடுத்திருக்கக் கூடாதா?

**அம்:** நீ 'லாண்டரி'க்குப் போகப் போறேன்னு எனக்கு ஜோஸ்யம் தெரியுமா, என்ன? ஓடிப் போய் வாங்கிண்டு வா!

**மணி:** போம்மா! கமலாவைப் போய் வாங்கி வரச் சொல்லேன்.

**அம்:** அவள் பாட்டுச் சாதகம் பண்ணுகிறுள். இப்போ போக மாட்டா. புருஷப் பிள்ளையா லட்சணமா கடைக்குப் போகாமல்..

**மணி:** இன்னிக்குப் பரீட்சை, அம்மா!

**அம்:** அடுப்பிலே குழம்பு கொதிக்கிறது. போய் உப்பு வாங்கிண்டு வாடான்னு என்னவோ கதை எல்லாம் அளக்கிருயே! இரு! இரு! இன்னிக்கு உன் சோற்றிலே உப்பில்லாக் குழம்புதான்!

**மணி:** கொண்டா இப்படி பையை! (தனக்குள) நான் ஒருத்தன்தான் இவர்களுக்குத் தெரிகிறது.

(போகிறுன்.)

**அப்:** மணி! கடைக்கா போகிருய்?

**மணி:** இல்லே அப்பா! கடையிலேயிருந்து இப்பத்தான் வருகிறேன்.

**அப்:** என்ன அது?

**மணி:** உப்பு.

**அப்:** சரி! உள்ளே அதைக் கொடுத்துவிட்டு இங்கே வா.

**மணி:** (தனக்குள்) சரிதான்! இன்றைக்கு நான் படித்தாற் போலத்தான்.

(போகிறுன்.)

**அப்:** இந்தா இரண்டணு! கடைக்குப் போய், பேப்பர் வாங்கிக்கொண்டு வா.

**மணி:** இப்பத்தானே அப்பா கடைக்குப் போயிட்டு வரேன். திரும்பவும் போகச் சொல்லுகிருயே!

**அப்:** சரிதாண்டா! இப்ப ஓட்டலுக்குப போய் இரண்டு மெது வடையும் ஒரு மசால் தோசையும் வாங்கிண்டு வாடான்னு ஓட மாட்டே? அதைப் போலத்தான்; போடா!

(அந்தப் பக்கமாக மணியின் பாட்டி வருகிறுள்.)

**பாட்டி:** ஏண்டாப்பா! மணியை எங்கேயாவது கடைக்கு அனுப்பப் போகிருயா?

**அப்:** ஆமாம் அம்மா! உனக்கு ஏதாவது வேணுமா?

**பாட்டி:** ஆமாண்டாப்பா! ஒரு அரையணுவுக்குச் சுக்கு வாங்கிண்டு வரச் சொல்லு. சுக்குக் கஷாயம் போடணும்!

(மணியின் அக்கா வருகிறுள்.)

**மணி:** அக்கா! நீ ஒருத்திதான் பாக்கி! உனக்கு ஒன்றும் வேண்டாமா?

**அக்கா:** கடைத் தெருப் பக்கமாகத்தானே போகிருய்? அப்படியே மாலதி வீட்டுக்குப் போய், 'கொலையும் கொள்ளையும்' என்ற கதைப் புஸ்தகம் வாங்கிண்டு வா! அப்படியே ஸ்வெட்டர் நூலும், உல்லனும் வாங்கிண்டு வா!

**மணி:** சரிதான்! நான் சும்மா விளையாட்டுக்காகக் கேட்டால் நீ வந்து....

**அக்:** அந்த வழியாகத்தானேடா போறே? அப்படியே போய் அதை வாங்கிண்டு வந்தால் தேய்ந்தா போய்விடுவாய்?

**மணி:** எனக்குப் படிக்கணுமே.

**அக்:** ஆமாம்! நான் சொல்லும் போதுதான் ஏதாவது சாக்கு வரும். மீதிக்கெல்லாம் அக்கா வேணும். இரு! இரு!



**மணி:** ஐயையோ! ஆரம்பிச்சு டாதேயேன், உன் ராமாய ணத்தை! நான் போறேன்! போறேன்!

**அப்:** எங்கேடா பேப்பர்?

**மணி:** இதோ..(ஓடுகிறான்)

(வெளியிலிருந்து வந்த மணி திரும்பப் புத்தகத்தை எடுத்து வைத்துக்கொண்டு படிக்க உட்காருகிறான். சமையல் உள்ளிலிருந்து அம்மா வருகிறாள்.)

**மணி:** (தனக்குள்) ஐயையோ! இதோ அம்மா வருகிறாளே!

**அம்:** மணி! படிச்சது போதும்! வெந்நீர் ஆறிப்போறது. போய்க் குளிச்சுட்டு மற்ற வேலைகளைப் பாரு. அப்புறம் பள்ளிக்கூடம் போக நாழியாயிடுத்துன்னு குதிக்காதே.

**மணி:** என்ன அம்மா! ஒரு வரி கூடப் படித்து முடிக்கவில்லை. இதை முடிச்சுட்டுத்தான் நான் குளிக்கப் போவேன்.

**அம்:** நீ எப்படியாவது போ! சொன்ன பேச்சைத் துளிக்கூடக் கேட்பது கிடையாது! மகா முரடு! கூடமாட உதவி செய்யாவிட்டாலும் இந்தப் பசங்கள் அநுசரணையாகவாவது நடக்கக் கூடாதா? எல்லாம் என் தலையெழுத்து!

**மணி:** அட கடவுளே! இதற்கு ஒரு பிரசங்கமா? இதோ போய் விட்டேன் குளிக்க!

[மணி ஒன்பதரை ஆகிவிட்டது. மணி பள்ளிக்கூடம் போகத் தயாராயிருக்கிறான்.)

**மணி:** (தனக்குள்) கொஞ்சம் சீக்கிரமாகப் போனாலாவது பள்ளிக்கூடத்திலே உட்கார்ந்துண்டு நிம்மதியாப் படிக்கலாம்.

**மணி:** அம்மா! போயிட்டு வரேன்.

**அம:** என்னடா இவ்வளவு சீக்கிரம்?

**மணி:** இல்லேம்மா! வாத்தியார் சீக்கிரம் வரச் சொன்னார்.

[பள்ளியில் தன் வகுப்பில் ஒருவரும் வராததைக்கண்டு மிகவும் நிம்மதியாகப் பெஞ்சியில் உட்கார்ந்து படிக்கத் தொடங்குகிறான்.]

**மணி:** பாபருக்கும்..

('யாரது மணியா?' என்ற குரல் கேட்டுத் திரும்புகிறான் மணி. அங்கு, சரித்திர ஆசிரியர் வந்துகொண்டிருக்கிறார்.)

**ச. ஆசிரியர்:** நல்ல வேளை! யாருமே வந்திருக்க மாட்டார்களோ என்ற எண்ணத்துடன் வந்தேன். நீ ஒருத்தனாவது வந்திருக்கிறாயே! இந்தப் பையிலே மளிகைக் கடை சாமான் இருக்கிறது. உனக்குத்தான் நம்ப வீடு தெரியுமே! இதைக் கொண்டு போய் நம்ப வீட்டிலே..

**மணி:** (திகைக்கிறான். தனக்குள்) அட கடவுளே! ராமேசுவரம் போனாலும் சனீசுவரன் விடவில்லையே! வீட்டிலேதான் அப்படி என்றால் இங்கே வந்தாலும் அதே கஷ்டம்தானா?

**ச. ஆ:** என் மணி விழிக்கிறாய்?

**மணி:** (தன்னைச் சமாளித்துக் கொண்டு) ஒன்றுமில்லை; கொடுங்கள் சார், போகிறேன்!

(போகிறான்.) **[திரை]**


பாலகுமார்
கதை: ஆர்வி சித்திரம்: ஸாமி
க்ளிங்...க்ளிங்
நான்தான் டிரைவர். அம்மா ஊருக்குப் போயிருக்காங்க. வர இரண்டு நாளாகும்!
நீ ஏன் போக வில்லை? தாயி எங்கே?
தெரியாது!
உம் வண்டியை விடு!
என்ன வீடு திறந்துகிடக் கிறது. டிரைவர் எங்கே?
KING & CO.
தாயீ, தாயீ!
வந்தவங்களின் அடையாளம் தெரியு மா உனக்கு?
டைரெக்டர், ஸார்! அம்மாவுக்கு ஆபத்து!! யாரோ இரண்டுபேர் வந்தாங்கோ
ஹலோ! ஆமாம், இன்ஸ்பெக்டர் தானே? போலீஸ் நாய் இருக்கிறதா? ரொம்பப் பேஷ்! சரி, தாமுடியுமா? இதோ வருகிறேன்.


வீட்டைப் பூட்டிக் கொண்டு இதோ நானும் உங்களுடன் புறப்படுகி றேன்.
டேய், டைகர்! இவரோடு போ!
நீங்கள் போங்கள் நான் வருகிறேன்!
தாயீ! நீ ஸ்டுடியோ வில் இரு. நான் சர் க்கஸ் போகிறேன்
சரி
கதவு பூட்டி யிருக்கிறதே!
யார் இவன்? திருடனா?
அரை மணி கழித்து. . . . .
தொடரும்.




அசட்டுப் பிச்சு ஹார்பரிலிருந்து கடல் ஓரமாக மணலில் இறங்கி நடந்து சென்றான். விதவிதமான வர்ணக் கிளிஞ்சல்கள் அவன் கண்ணைப் பறித்தன. எத்தனை நிறங்களில் எத்தனை விசித்திரமான கிளிஞ்சல்கள்! இவையெல்லாம் எவ்விதம் விளைகின்றன, எங்கிருந்து உண்டாகின்றன என்று ஆச்சரியப்பட்டான். பார்க்க மிக மிகக் கவர்ச்சியாக இருந்த பெரிய கிளிஞ்சல்களாகப் பொறுக்கிக் கொண்டே நடந்து போனான். கடல் நண்டுகள் காற்றாக விரைந்து அங்கும் இங்குமாய் அவன் காலடியில் ஓடின. எப்படிப்பட்ட விஞ்ஞானியினாலும் இத்தகைய ஒரு சிறு சுறுசுறுப்பான இயந்திரத்தை இயக்க முடியுமா? அந்தச் சிறு நண்டுகள் தான் எத்தனை சுத்தமாகவும் சுறுசுறுப்பாகவும் இருந்தன! எங்கேயோ பார்த்துக்கொண்டு எங்கேயோ ஓடி ஒளிந்துகொள்வது பார்க்க வேடிக்கையாகவே இருந்தது. அசட்டுப் பிச்சு சிறிது நேரம் நின்று வேடிக்கை பார்த்தான்.

அந்த இடத்தில் கடற்கரை சிறிது வளைந்து திரும்பியிருந்தது. ஹார்பரை அணைத்துப்போட்டிருந்த சிமிட்டிப் பாறைகளைப் போல அந்த இடத்தில் ஒரே பாறைப் பாளங்கள் மணலில் புதைந்து கிடந்தன. கடல் அலைகள் தளவரிசை போட்டுத் தரையை மெழுகி மெழுகிப் போய்க்கொண்டிருந்தன. இயற்கையின் விசித்திரத்தைப் பார்த்து வியக்காதவர்கள் தான் யார்?

அலை பூசிச் சென்ற மணலிலிருந்து ஒரு பெரிய நண்டு கிளம்பி வெளியே வந்தது. விர்ரென்று வைத்ததை எடுக்கப் போவது போல் பாறையைச் சுற்றிப் போயிற்று. சின்னஞ் சிறு நண்டுகள் சருகுகள் மாதிரி மணலில் ஓடி விளையாடிக் கோலமிட்டுக் கொண்டிருந்தன. அந்தப் பெரிய நண்டுமட்டும் கரையில் வெகுதூரம் வந்தது. பிச்சு அதைப் பார்த்துக் கொண்டே போனான். அந்த இடத்தில் மனித நடமாட்டமே இருப்பதில்லை என்பது தெரிந்தது. சற்றுத் தூரத்தில் ஹைகோர்ட்டுக் கரையில் வெள்ளையும் கறுப்புமாய் மனிதர்கள் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்கள். காற்றில் ரேடியோ சங்கீதம் மிதந்து வந்து கொண்டிருந்தது. கார்த்திகை

மாதத்துக் கீழ்வானம் சிவந்து படர்ந்திருந்தது. விளக்குகள் ஏற்ற ஒரு நாழிகை நேரம் இருக்கும்போலிருந்தது. பிச்சு அந்த நண்டு போவதையே பின்பற்றிச் சென்றான். பின்னால் அரவம் கேட்டதை அறிந்துகொண்டு விட்டது நண்டு. பரபரவென்று வளையாக இருந்த ஓர் இடத்தில் பொசுக்கென்று நுழைந்து விட்டது. பிச்சு குனிந்து பார்த்தான். கறுப்புப் புள்ளிகள் போலிருந்த நண்டின் கண்கள் தெரிந்தன. அவை பிச்சுவைப் பார்த்துவிட்டன. அடுத்த கணம் நண்டு மணலுக்குள் போன இடம் தெரியவில்லை. எட்டியமட்டும் வளையில் ஒன்றுமே தெரியவில்லை. பிச்சு மணலைத் தோண்டிப் பார்க்க எண்ணினான். கிட்டத்தட்ட கணுக்கால் பதியும் அளவுக்கு மணலைப் பறித்து விட்டான். நண்டையோ வளையின் துவாரத்தையோ காணவில்லை. எப்படியும் உள்ளே தானே இருக்கவேண்டும் என்று மணலை அவசர அவசரமாகத் தோண்டினான். சமுத்திர மணலைப் பறிப்பது எத்தனை சுகமான விளையாட்டு!

முழங்கால் அளவு பறித்துவிட்டான். அதற்குமேல் அடியில் பறிக்க முயன்றபோது—

கீழே பாறைபோல் ஏதோ கையில் தட்டுப் பட்டது. அப்படியானால் நண்டு என்ன வாயிற்று? பிச்சு மணலைப் பக்கவாட்டிலும் பறித்தான். நண்டைக் காணவில்லை. ஆனால் பாறைபோல் இருந்தது பாறை அல்ல என்று தெரிந்தது. பிச்சு பரக்கப் பரக்கத் தோண்டிப் பார்த்தபோது அவனுக்கு ஆச்சரியம் மூச்சை அடைத்தது.

அது பெரிய டிரங்குப் பெட்டி! இது என்ன புதையலா என்று அவனுக்கு ஒரே வியப்பாக இருந்தது! அந்தப் பெட்டியை அவன் ஒருவனால் அசைக்க முடியவில்லை. என்ன செய்வது என்று யோசித்தான். பிச்சுவுக்குத்தான் இந்த மாதிரி சமயங்களில் மூளை தீவிரமாக வேலை செய்யுமே! மணலைப் போட்டுப் பழையபடி மூடினான். ஹைகோர்ட்டுப் பீச்சை நோக்கித் தலை தெறிக்க ஓடினான்.

இன்ஸ்பெக்டர் குரூப் எங்கே நிற்கிறார் என்று விழிகளை ஓட்டித் தேடின அவன் கண்கள். அந்த மனிதர் எங்கே நின்றாரோ, அது கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆனால் மப்ளரும் ஸ்வெட்டரும் அணிந்த மனிதன் ஒருவனுடைய இரண்டு நெருப்புக் கண்களை அவன் கண்கள் பார்த்துவிட்டன. பிச்சு நின்று உற்றுக் கவனித்தான். சந்தேகமில்லை! அந்தக் கண்களை அவன் இதற்கு முன்பு எங்கோ பார்த்திருக்கிறான்!

இதற்குள் அந்த மனிதன் தலையை வேறுபுறமாகத் திருப்பிக் கொண்டு மெதுவாகப் பதுங்குவது போலத் தெரிந்தது. பிச்சு தன்னையறியாமல் கூட்டத்தில் நுழைந்து நுழைந்து அந்த மனிதன் போகும் திக்கிலேயே சென்று கொண்டிருந்தான்.

ரேடியோவில் பாரதியாரின் பாப்பா பாட்டை யாரோ உணர்ச்சியுடன் பாடிக்கொண்டிருந்தார்:

**"பாதகஞ் செய்வாரைக் கண்டால்-நீ**
**பயங் கொள்ளலாகாது பாப்பா!**



**"மோதி மிதித்துவிடு பாப்பா-அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!"**

பாட்டு வர வர உரத்த குரலில் கேட்டது. தனக்காகத்தான் இந்தப் பாட்டைப் பாடுவதாக எண்ணிக்கொண்டான் பிச்சு. பாட்டுக் குரல் உயர உயர அவன் அந்த மனிதனை விடாமல் சுற்றிச் சுற்றி வந்தான்.

அந்தச் சமயத்தில் அவன் தோள்மீது கையை வைத்து யாரோ அழுத்தினார்கள். பிச்சு திரும்பிப் பார்த்தான். முன் பின் தெரியாத ஒருவர், "அதோ உன்னை அந்த இன்ஸ்பெக்டர் கூப்பிடுகிறார் பார்!" என்று சுட்டிக் காட்டினார். பிச்சுவுக்குத் தைரியமும் தெம்பும் வந்தன. ஓடி அவரிடம் வந்தான்.

"உங்களை அரைமணி நேரமாகத் தேடுகிறேன்!" என்றான்.

"நான் அரை மணி நேரமாக இங்கேதானே அந்தத் துப்பறியும் இலாகா ஆளுடன் பேசிக்கொண்டிருக்கிறேன்! உன்னைத்தான் காணோமே என்று பார்த்துக்கொண்டிருக்கிறேன்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

"சரி; வண்டியை நிறுத்திவிட்டு உடனே என்னோடு வாருங்கள். அந்த ஆளைக் காட்டுகிறேன்!"

"எந்த ஆளை?" என்று கேட்டுக்

கொண்டே இன்ஸ்பெக்டர் அவனைப் பின்தொடர்ந்தார்.

பிச்சு முன்னால் சென்றான். அவன் கண்கள் எட்டிய மட்டும் அந்த ஜனக் கூட்டத்தைத் துருவித் துருவி ஆராய்ந்தன. அந்தக் கூரிய நெருப்புக் கண் ஆளைக் காணவில்லை. அந்தக் கூட்டத்தில் எங்கேயோ மறைந்து மாயமாகப் போய்விட்டான்.

''யாரை இப்படித் தேடுகிறாய்?'' என்றார் குரூப்.

''செல்லமுத்துவை - என்னோடு நேற்று இரவு ரெயிலில் வந்தான் அவன்!''

விளக்குகள் பக்கென்று நெடு கலும் எரியத் தொடங்கின. பத்து நிமிஷங்கள்போல இருவ ரும் சுற்றிச் சுற்றி வந்தும் ஆள் போன சோடு தெரியவில்லை.

''அவன் போனால் போகட்டும்; என்னோடு வாருங்கள். கொஞ்ச தூரம் மணலில் போக வேண்டும்!''

குரூப்புக்கு ஒன்றும் புரிய வில்லை. இருந்தாலும் மறுத்துப் பேசாமல் வந்தார். அந்தத் துப்பறி யும் இலாகா நண்பரைப் பார்த்து, ''இங்கே இரு; நாங்கள் சிறிது நேரத்தில் வருகிறோம்'' என்று சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

*　　*　　*

இருளில் இன்ஸ்பெக்டரும் பிச்சுவும் மறைந்து போனார்கள். அரை மணி நேரம்போல ஆகியும் அவர்கள் திரும்பி வரவில்லை. பீச்சில் இருந்த நண்பர் மெது வாக அவர்கள் சென்ற திக்கி லேயே நடந்துகொண்டிருந்தார்.

திடீரென போலீஸ் குழல் ஒன்று ஊதும் சத்தம் கடல் ஓரத்திலிருந்து கேட்டது.

''உதவி, உதவி!'' என்று ஊதுவது போல் குழல் சத்தம் விட்டு விட்டுப் பயங்கரமாய் ஒலித்தது.

அந்த நண்பர் அங்கிருந்த படியே தன்னிடம் இருந்த குழலை எடுத்துப் பலமாக ஊதினார். அதனால் இரண்டுவிதப் பலன் ஏற்படும் என்றுதான் ஊதினார். ஒன்று இன்ஸ்பெக்டர் குரூப்புக் குத் தான் வருவது தெரியும். மற்றொன்று, கரையில் பீட் நிற்கும் போலீஸ்காரர்கள் மேலும் துணைக்கு ஓடி வருவார்கள். அவர் மேலும் மேலும் ஊதிக்கொண்டே விழுந்தடித்துக்கொண்டு கரை ஓர மாக ஓடி வரும்போது எதிரே யாரோ ஓர் ஆள் தலைகால் புரி யாமல் வருவது தெரிந்தது.

''விடாதே—பிடி! விடாதே—பிடி!'' என்று பின்னாலிருந்து குரூப்பும் பிச்சுவும் கத்திக்கொண் டிருந்தார்கள்.

துப்பறியும் இலாகா நண்பர் மேல் அங்கவஸ்திரத்தைப் பிரித் துக் கையில் எடுத்துக்கொண்டு எதிரே ஓடி வந்தவனை வழி மறித்தார். ஒரு புறம் கரிய கடல்; மறுபுறம் இரும்பு வேலி. அந்த ஆள் ஓடும் இடம் தெரியா மல் பாய்ச்சல் காட்டிக்கொண்டே யிருந்தான். இவ்விதம் ஐந்து நிமிஷமாயிற்று. இதற்குள் குரூப் பும் பிச்சுவும் பின்புறத்தில் நெருங்கிவிட்டார்கள். பீச்சிலிருந் தும் இரண்டு பேர் வந்தார்கள்.

நடுவில் அகப்பட்டுக்கொண்ட வனுக்குத் தப்ப வேறு வழியே யில்லை. எக்கச் சக்கமாய் மாட்டிக் கொண்டுவிட்டான்.

குரூப் நண்பரின் அங்கவஸ்தி ரத்தை வாங்கி அந்த மனிதனைப் பிடித்து இறுகப் பிணைத்தார்.

இரண்டு கைகளையும் பின்புறமாய் வளைத்துக் கட்டினார்.

அவனுடைய சிண்டைப் பிடித்துத் தடதடவென்று இழுத்துக்கொண்டே சென்றார். குழல் கேட்டு ஓடிவந்த இரண்டு ஜவான்களை அழைத்து, "அந்தப் பெட்டியைத் தோண்டி எடுங்கள்" என்று உத்தரவிட்டார் குரூப்.

அடுத்த சில நிமிஷங்களில் பெட்டியை இருவருமாக வெளியில் தூக்கினார்கள். ரங்கூனிலிருந்துவந்த பெட்டிதான் அது!

"கொண்டு போங்கள் கரைக்கு!" என்று சொல்லிவிட்டு அந்த ஆளையும் பிடித்து இழுத்துக்கொண்டு எல்லாருமாகப் பீச்சு ரோட்டுக்கு வந்தார்கள்.

அப்புறம் என்ன?

ஒரு ஜவான் ஓடிப் போலீஸ் வானை அழைத்து வந்தான். எல்லாருமாக அதில் ஏறிக்கொண்டார்கள்.

பிச்சுவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கூத்தாடினார் இன்ஸ்பெக்டர்.

மறுநாள் சென்னைப் பத்திரிகைகளில் எல்லாம் அவன் போட்டோவும் அவனுடைய அதி தீவிர மேதா விலாசமும் அடிபட்டன.

"எல்லாம் சரி; செல்லமுத்து இதில் எப்படிச் சம்பந்தப்பட்டான்?" என்றார் இன்ஸ்பெக்டர்.

"நானே சொல்கிறேன்" என்றான் பிச்சு, ரொம்பத் தெரிந்தவன் போல.

(தொடரும்)



# கல்கத்தா டெஸ்ட்

சென்னை-600 008

டிசம்பர் 31-ஆம் தேதி கல்கத்தா மைதானத்தில் இந்தியாவுக்கும் ஸில்வர் ஜுபிலி டீமுக்குமிடையே மூன்றாவது டெஸ்ட் ஆரம்பமாகியது.

ஜுபிலிக் கட்சி ஆரம்பமுதலே உஷாராக ஆடியது. இந்தியா சுமாராக ஆடி 238 ரன்களுக்கு ஆல் அவுட் ஆகியது. உம்ரிகர் மாத்திரம் அபாரமாக ஆடி, செஞ்சுரி போட்டிருக்காவிட்டால் இந்தியாவின் நிலைமை படுமோசமாகியிருக்கும். ராம்தீனும் வோரலும் மேற்கிந்தியத் தீவுகளுக்குத் திரும்பிச் சென்றுவிட்டனர். அதற்குப் பதில் ஆஸ்திரேலிய அதியற்புத ஸ்பின்னர் ஐவர்ஸனும் இங்கிலாந்து ஆட்டக்காரர் வாட்கின்ஸனும் இந்த டெஸ்டில் ஆடினர். ஐவர்ஸின் அதியற்புதப் பந்துவீச்சுக்குப் பயந்து உம்ரிகர் தவிர, மற்ற அனைவரும் சுலபத்தில் அவுட்டாக நேர்ந்தது. மொத்தத்தில் ஐவர்ஸனுக்கு நாலு விக்கெட்டுகள்; பெர்ரிக்கு நாலு விக்கெட்டுகள்!

ஜுபிலி டீம் ஆடத் தொடங்கியது. விக்கெட்டுகளும் சரசரவென்று விழுந்தன. எதிர்க்கட்சி இந்தியாவின் ஸ்கோரைக்கூட அணுகாதோ என்னவோ என்ற நிலைமையைக் குப்தே ஏற்படுத்திவிட்டார். நிலைமையைச் சமாளித்தார் ஆஸ்திரேலிய ஆட்டக்காரர் மியூல்மன்! அவர் 75 ரன்கள் எடுத்தார். ரன்கள் குறைவே தவிர, அவருடைய ஆட்டம் குறிப்பிடத் தக்கது. கடைசியில் ஐவர்ஸன் நாலாபுறங்களிலும் பந்தை அடித்து 20 ரன்களைக் குவிக்கவே, எதிர்க்கட்சிக்கு 7 ரன்கள் லீடு கிட்டியது!

இந்தியா இரண்டாவது இன்னிங்ஸில் நிலைமை மோசமாகியது. 5 விக்கெட் நஷ்டத்துக்கு 30 ரன்கள்தான் சேர்ந்தன.

நல்லவேளையாக ராம்சந்தும் கட்கரியும் சேர்ந்து ஸ்கோரை உயர்த்தினர். கௌரவத்தோடு தலை நிமிரலாம் என்ற சமயத்தில் கட்கரி வெளியேறிவிட்டார். ராம்சந்த் மாத்திரம் சிறிதும் சளைக்காமல் பௌண்டரி பௌண்டரியாக கொறுக்கி 111 ரன்கள் எடுத்து அவுட்டானது குறிப்பிடத் தக்கது. இந்தியா ஆல் அவுட் 190.

வெற்றிபெற 184 ரன்களே தேவையாக இருந்தன ஜுபிலி டீமுக்கு. சிம்ப்ஸன், மியூல்மன், எம்மெட் இவர்கள் நல்ல வேளையாகச் சீக்கிரம் வெளியேறிவிடவே, இந்தியாவின் நிலைமை சற்றுத் திருப்திகரமாக இருந்தது. ஆனால் பிறகு ஆடவந்த மார்ஷலும் வாட்கின்ஸனும் சேர்ந்து ரன்களை வாரிக் குவித்துவிட்டனர். ஆட்டம் முடிய 12 நிமிஷம் இருக்கும்போதே, ஜுபிலி டீம் இந்தியா ஸ்கோரைத் தாண்டி, வெற்றியை நிலைநாட்டி விட்டது.

அடுத்த டெஸ்ட் சென்னைக் கார்ப்பொரேஷன் ஸ்டேடியத்தில் ஜனவரி 13-ஆம் தேதி ஆரம்பமாகிறது. குலாம் அகமது காப்டனாக இருப்பார். —கே.எஸ்.பி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS-4.
ASSOCIATE EDITOR: R. VENKATARAMAN.

# பொங்கல் பரிசு!

உங்கள் சிநேகிதர், தம்பி தங்கைகளின் பிறந்த நாள், விசேஷ நாள் பரிசாக நீங்கள் வழங்கக்கூடிய ஒப்பற்ற பரிசு!

★

## கண்ணன் வெளியீடுகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சின்ன ராஜா | 2. | பவழவல்லி |
| 3. | ஜக்கு | 4. | விளையும் பயிர் |
| 5. | விஞ்ஞானம் பேசுகிறுர் | 6. | சமர்த்து மைனு |
| 7. | ராஜாவும் குருவியும் | 8. | கழுகும் கிளியும் |
| 9. | தவளையும் காளையும் | 10. | தங்கத்தின் பந்து |
| 11. | கோழி விதைத்த நெல் | 12. | என் பேர் என்ன? |

13. குளிகைத் தீவு

இந்த 13 புத்தகங்கள் அடங்கியவை அழகிய பரிசுப் பாக்கெட்டுகள்; ஸெலபோன் காகிதம் சுற்றியது.

பரிசுப் பாக்கெட்டுகள்

**விலை ரூ. 4/-**

★

தனித் தனியாக வாங்கினுல் மொத்தம் ரூ. **5-13-0** ஆகிறது.

சென்ற வருஷம் ரூ. 2-8/- ஸெட் வாங்கியவர்கள்
1-8/- அனுப்பி மீதியைப் பெற்றுக்கொள்ளலாம்
தபால் செலவு தனி

ஜனவரி முடியத்தான் இந்தப் பரிசுப் பாக்கெட்டுகள் விற்பனை ஆகும்.

காங்கிரஸ் கண்காட்சியில் மின்சார இலாகாவுக்கு எதிரிலுள்ள கலைமகள் ஸ்டாலைப் பாருங்கள்.

மானேஜர் :: கண்ணன் :: சென்னை - 4

Reg. No. M. 5542

# 1954

கண்ணன்



காலண்டர்

| ஜனவரி | பிப்ரவரி | மார்ச் | ஏப்ரல் | மே | ஜூன் | | | | | | ஜூலை | ஆகஸ்ட் | செப்டம்பர் | அக்டோபர் | நவம்பர் | டிசம்பர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெள் | திங் | செவ் | வெள் | ஞாயி | புத | 1 | 8 | 15 | 22 | 29 | வெள் | திங் | வியா | சனி | செவ் | வியா |
| சனி | செவ் | புத | சனி | திங் | வியா | 2 | 9 | 16 | 23 | 30 | சனி | செவ் | வெள் | ஞாயி | புத | வெள் |
| ஞாயி | புத | வியா | ஞாயி | செவ் | வெள் | 3 | 10 | 17 | 24 | 31 | ஞாயி | புத | சனி | திங் | வியா | சனி |
| திங் | வியா | வெள் | திங் | புத | சனி | 4 | 11 | 18 | 25 | | திங் | வியா | ஞாயி | செவ் | வெள் | ஞாயி |
| செவ் | வெள் | சனி | செவ் | வியா | ஞாயி | 5 | 12 | 19 | 26 | | செவ் | வெள் | திங் | புத | சனி | திங் |
| புத | சனி | ஞாயி | புத | வெள் | திங் | 6 | 13 | 20 | 27 | | புத | சனி | செவ் | வியா | ஞாயி | செவ் |
| வியா | ஞாயி | திங் | வியா | சனி | செவ் | 7 | 14 | 21 | 28 | | வியா | ஞாயி | புத | வெள் | திங் | புத |